உ

ஜோதிமயம்.

# ரஞ்சித போதினி

கதை, காவ்யம், சரித்திரம், நவீனம், புராணம், இதிகாசம்
அனுபவ முதலிய விஷயங்களைப் புனைந்துகொண்டு
வெளிவரும் ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(தமிழ்மறை)

ஆசிரியர் :—தமிழ்ப்பூஷணம் ஸ்ரீ வாசுதேவ ராவ் கேய்க்வார்.


| | | |
|---|---|---|
| தொகுதி 2 | இரக்தாக்ஷிஷுஆவணிமீ 1924ஷு ஆகஸ்டுமீ | பகுதி 7 |


## கடவுள் வணக்கம்.

திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கேயாளா
யுரைமருவி யாமுணர்ந்தோங் கண்டீர்—தெரிமினோ
விம்மைக்கு மம்மைக்கு மெல்லா மனமார்ந்தோமே
பொம்மைப் புறனுரைப்ப தென்.

## சந்தா நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்.

கடந்த ஆடிமாதத்திய சஞ்சிகையானது காலந்தாழ்ந்து வெளிப்போந்தமைக்குக் காரணம் யாதெனின், நமது பத்திரிகையின் ஆசிரியரவர்கள் சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பிவந்து சேர்ந்ததும் தேகசௌகரியமின்றி யிருந்ததனாலும், அதன்றியும் நமது அச்சுக்கூடத்து யந்திரம் பழுதுபட்டுப் போயினமையினாலுமேயாகும். மிற்க, கடந்த ஆடிமாதத்திய பத்திரிகையை ஜூலைமீ 26உயே தபாலில் போடப்பட்டும் பத்திரிகை வந்துசேரவில்லையென்று புகார்க் கடிதங்கள் பல வந்துகொண்டிருக்கின்றன. நம்மால் ஜூலைமீ 26உயனுப்பப்பட்ட பத்திரிகைகளில் சில திரும்பிவிட அவைகளைப் பார்க்கும்போது சௌகார்ப்பேட்டை தபாலாபீஸில் ஆகஸ்டுமீ 2உ முத்திரை போடப்பட்டிருந்தமையால் பத்திரிகை தாமதித்தே வந்திருக்கலாமாயினும், ஆவணிமாத சஞ்சிகை சேர்ந்ததும், ஆடிமீ சஞ்சிகை சேராதவர்கள் அறிவித்தால் உடனே அனுப்பப்படும்.

எம். சம்மந்தமுதலியார், பிரசுரகர்த்தா.

# ரஞ்சித போதினி

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

உருத்ரோத்காரி௵ ஆவணி௴ 1924௵ ஆகஸ்டு௴


## ஸ்வயராஜ்யத்தின் சூக்ஷ்மம்.

**ஸ்**வயராச்சியம் என்பது என்ன? இதனை முதலில் ஆரம்பித்தது யார்? இது எதனால் கிளைத்துச் செழித்தது? இத்தியாதி விஷயங்களைப்பற்றி பிரஜைகளுக்கு என்ன தெரியும்? எவர் இதற்குச் சமாதானங் கூறுவர்? இதுவரையிலும் ஒருவரும் இதற்குச் சரியான சமாதானங் கூறியுளரா? மஹாத்மா காந்தியடிகளின் அபிப்பிராயம் என்ன? திலக மஹரிஷியின் நோக்கம் எவ்வாறிருந்தது? இவைகளுக்குத் தாத்பரியம் எவரேனும் கூறினார்களா? இவ்விதமாயின் ஸ்வராஜ்யம் அடைவது-எப்படி? தற்காலம் பாடுபடும் தேசபக்தர்களின் நோக்கந்தானென்ன? இதுகளை விவரமாய் இதுவரையிலும் எவரும் சரியானபடி கூறவேயில்லை. இங்ஙனமிருக்குமாயின் நாம் எப்படி ஸ்வயராஜ்ய மெய்தமுடியும்? ஸ்வயராஜ்யம் அடையக்கூடிய சூக்ஷ்ம முறைதானென்ன?

மேற்கண்ட விஷயங்களைப்பற்றி விவரமாய் வியாக்கியானம் வெளியானதாய்த் தெரியவில்லையெனினும், பொதுவாக ஸ்வயராஜ்யம் என்பது ஸ்வதந்தரத்துடன் வாழ்வதேயாகும். ஸ்வதந்தரமாய் தற்சமயம் வாழ்வதற்கில்லாமற் போனதற்குக் காரணமென்னையெனின், நம்மையாளும் பிரிட்டிஷாரென்று பலர் கூறுகின்றனர். இது நம்மால் மறுக்கக்கூடிய விஷயமே. ஏனெனில் பிரிட்டிஷார் நமது க்ஷேமத்தில் மிதமான நோக்கமுடையவர்களாகவே யிருந்தனர். அரசாங்கத்தாரிடம் உத்தியோகம் வகித்துவந்த நம்மவர்களே யவர்களைத் தம்வசப்படுத்தி, பிற்காலத்திய போக்கை ஆய்ந்தோய்ந்து பாராமல் அவ்வச்சமயத்திற்குத் தக்கபடி தங்கள் தங்கள் க்ஷேமங்களையே பெரிதாகக்கருதி 'குலத்தைக் கெடுத்த கோடாரிக் காம்பு' ஒத்தனர். அதனால் நேர்ந்த துன்பம் இவ்வளவவ்வளவல்ல. கணக்கிடக்கூடாததாகவே யிருந்தது—இருக்கிறது—இருக்கும். இதனால்

பிரஜைகள் வருந்துகின்றனர்—வருந்தினர்—வருந்துவர். இவ்வண்ணம் கஷ்டம் ஏற்பட்டதற்குப் பிரிட்டிஷார்மீது குறை கூறுவது தகுதியற்ற தன்மையேயாகும். இதுவரை இத்தகைய விஷயம் நடந்து போய்விட்டது. இனி இதைப்பற்றி சிந்திப்பது தவறு. ஆனால் இதைச் செய்யுமுன்னமே கவனித்திருக்கவேண்டும். இனி யோசிப்பதில் யாதும் பயனில்லை.

"எண்ணித் துணிவது கருமம், துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு"

என்னும் பொய்யா மொழியார் வாக்கியப்படி இனி நடைபெறவேண்டியதையன்றே சிந்திக்க வேண்டும.

மஹாத்மா காந்தியடிகள் ஸாத்வீக முறையில் எதிர்க்கவேண்டும் என்கிறார். ஸாத்வீக முறையில் எதிர்ப்பதனால் என்ன நன்மை ஏற்படும்? ஒன்றுமே ஏற்படாது. மஹாத்மாவின் போதனைகளினாலும், நமது நாட்டுத் தலைவர்களினாலும் நமக்கு ஒருபோதும் ஸ்வதந்திரம் ஏற்படாது. ஏனெனில் காந்தியடிகளின் நோக்கம் ஒருவழியாகவும், தலைவர்களின் நோக்கம் வேறுவிதமாகவும் இருக்கின்றது. காந்தியடிகள் ஸாத்வீக முறையில் தேசியக் கல்வியையும், தேசத் தொழிலையும், முக்கியமாய் மானஸம்ரக்ஷண காரணமான கதர் உற்பத்தியையும் செய்யவேண்டுமென்று கூறுகிறார். தலைவர்களோ தங்களுக்கு கௌரவம், லாபம் முதலியன வேண்டுமென்கின்றனர். எவ்வழியிலேனும் தம் தம் சுகதுக்கங்களைப் பெரிதாகக் கருதும் தலைவர்களால் உலகத்துக்கு நன்மை எவ்வாறு ஏற்படும்? காந்தியின் சொல்லைப் பின்பற்றியே நடக்கும் தேசீயவாதிகளாக தற்கால தேசபக்தர்கள் இருந்திருப்பார்களாயின் சத்தியாக்கிரக ஆரம்பதினத்திலேயே நமக்கு ஸ்வதந்திரம் கிடைத்திருக்கும். இனி கிடைக்குமென்றெண்ணுவது குதிரைக்கொம்பே யாகும்.

ஸ்வயராஜ்யம் வேண்டுமென்னும் எண்ணம் நம்மவர்களில் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றதெனினும் அம்முறைகளை இப்பெரிய தேசபக்தர்கள் அநுஷ்டிக்கவேயில்லை. ஆனால் இவர்களின் எண்ணமெல்லாம் சுயகாரியார்த்தமானதாகவே யிருக்கிறது. இவ்விதமிவர்கள் இருந்தால் கலியுகம் ஆரம்பித்து நடந்ததுபோக மிகுந்திருக்கும் நான்கு லக்ஷத்து சொச்சம் வருஷங்களுக்குப் பிறகுங்கூட ஸ்வராஜ்யம் கிடைக்காது. சுயேச்சையடைய விரும்புபவன் சுயகாரியார்த்தமாகவே சகல விஷயத்திலும் நோக்கத்தைச் செலுத்தி தனது மேன்

மையையும், கௌரவத்தையுமே நோக்கமாகக்கொண்டு நடந்து கொள்ளுவான். அதுபோலவே தற்சமயமும் நடைபெறுகின்ற தென்றுதான் கூறவேண்டும்.

நிற்க, இதுவரையிலும் தேசத்தொண்டிற்காக ஈடுபட்டவர்கள் செய்திருக்கும் நன்மையென்ன? ஒன்றையும் காணவில்லையே? தேசபக்தர்களில் முதன்மைபெற்று விளங்கக்கூடியவர்கள் தங்கள் தங்கள் பத்தினிகளை யடக்கியாளுந் திறமையற்று அவர்கள் சொற்படி நடக்கக் கடமைப்பட்டு தாம்மாத்திரம் கதர் உடுத்தியும், மனைவி பரதேச ஆடைகளை யணிந்தும், அன்னார் மக்கள் தந்தைசொல் மீறி, தேசபாஷையைப் புறக்கணித்து பிறநாட்டு பாஷையை விரும்பிக் கற்று வருவதுமாகவன்றோ விருக்கின்றது. இங்ஙனமிருக்கின் ஸ்வயராஜ்யம் எங்ஙனம் எய்தும்?

மஹாத்மாவின் அரிய மொழிகளைப் போற்றி நடக்காத வரையில் ஒன்றுமே ஏற்படாது.

மஹாராஷ்டிர வீரரான திலகர் பெருமானின் வைராக்கிய மொழியாகிய 'எனக்குப் பிறப்புரிமை வேண்டும்' என்ற உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகாதவரையில் நமது ஸ்வதந்தரம் பிறரால் பறிக்கப்பட்டதேயாகும்.

தேசம் சீர்கெட்டுத் தத்தளிக்கும் இந்நிலையில் காந்தியடிகளின் மொழியாகிய ஸாத்வீகத்தை அரசாங்கத்தினரிடம் நாட்டி நம்மவர்களுக்குள் ஊக்கம்பெருக தேசீயக்கல்விமுறையைப் பூர்வீக முறைப்படி மிக்க குதூகலத்துடனும், உற்சாகத்துடனும் கற்கும்படி போதிக்கவேண்டும் அதோடு பரோபகார சிந்தையும் பயிற்றுவிக்கப்படல்வேண்டும். நாம் நம் நாட்டுச் சிறுவர்களுக்காக நம் நாட்டுக் கைத்தொழில்களை யபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை நாம் செய்வதற்கான யோசனையுடன் ஒவ்வொன்றையும் முயற்சித்துப் பார்த்து நூதன தொழில்களைக் கண்டுபிடிக்கவேண்டும். (அதாவது நூதன கைத்தொழில்களைக் கண்டுபிடிப்ப தென்பது அருகிக் கிடக்கும் பழமையான கைத்தொழில்களைமீண்டும் உயிர்ப்பித்தெழச்செய்வதுதான்.)

தற்காலம் நமது நாட்டு மக்கள் சோம்பலில் மூழ்கியும், தரித்திரத்திலாழ்ந்தும், தொழிலொன்றும் அறியாதவர்களாய் பொறாமையென்னும் பேய்வாய்ப்பட்டு பேராசையென்னும் பதர்களாய்த் திரி

கின்றனரென்றால் வேறு நாம் கூறவேண்டிய தென்ன ? நாம் பூர்வ காலத்தில் வாழ்ந்ததுபோல் செழிப்புற்று வாழவேண்டுமானல் நமது பூர்வீக முறையை மூதாதைகளைப்போன்று வைராக்கிய சித்தர்களாய்ப் பரோபகார சிந்தையும் காருண்யமு முடையவர்களாய் வெகு கால மாக நம்மைப் பிடித்து வருத்திக்கொண்டிருக்கும் வறுமையை ஓட்டி நமது பிறப்புரிமையை நாம் எய்தலாகும்.

நமக்கு தற்சமயம் வேண்டுவது ஸ்வதந்தரம். ஸ்வதந்தரம் என்பதற்குப் பொருள் சுயேச்சையுடன் வாழ்வதுவேயன்றி வேறன்று. நாம் நமது ராஜ்யத்தை விட்டுவிடும்படி தற்சமயம் நம்மை யாள்பவர்களைக் கேட்கவேயில்லை. அவர்களும் அவ்வண்ணம் நினைப்பதோ அல்லது கூறுவதோ தவறு. அவர்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய தொன்று. அதாவது: நவகண்டங்க ளென்று பூர்வகாலத்திய முனிபுங்கவர்களாலும், பூகோள சுகோள சாஸ்திரக் காரர்களாலும் வரையறுத்துள்ளதும், தற்காலம் ஆளப்பெறுவோர் களால் பஞ்சகண்டமாகப் பகிர்ந்து கூறப்பட்டதுமான இப்பூவுலகில் பரதகண்டவாசிகளைப்போன்ற இராஜவிசுவாசிகள் எவருமிலரென்றே கூறவேண்டும் இத்தகைய மேன்மையான நற்குணசாலிகளான இந்தியர்களின் மனதை எத்தனையோ விதத்திற் புண்படுத்தியதன் மேலன்றோ இனி நாம் இவ்விதம் வாழவியலா தென்றும், ஸ்வதந்தரம் வேண்டுமென்றும் கூறலாயினது. ஆனல் ஸ்வதந்தரம் என்பதற்கு நாமே நமது நாட்டை யாளவேண்டுமென்னும் கருத்துகொண் டல்ல வென்பதையும் குறிப்பிடுகிறோம். ஆனல் நம்மவர்களுக்கு வேண்டிய ஸ்வதந்தரமாவது எவையென்னின், நாம் தனிப்பட நம்மவர் களைக்கொண்டு நமது நாட்டையாளுவ தென்பதை யொழித்து தற் காலம் நம்மையாளும் பிரிட்டிஷாரே சமநோக்குடன் ஜாதிவித்தியாச மில்லாமல் எல்லாருடைய க்ஷேமங்களையும் கருத்திலமைத்து பக்ஷ பாதமில்லாமல் தோட்டி முதல் தொண்டைமான் வரையுமுள்ளவர் களை ஒரேவிதமாகப் பாவித்து ஆட்சிபுரியும்படியும், அழிந்து ஒழிந் து மறைந்துபோனதான கைத்தொழில்களை யபிவிருத்திசெய்வித்து இந்திய நாட்டைத் தம் சுயநாட்டைப்போலசீர்பெறச்செய்து இந்தி யர்களைச் சுகஜீவிகளாக வாழும்படி செய்யாதவரையில் நாம் தற்சமய முள்ள சங்கடத்தில் கிடந்துழலவே வேண்டும்.

பத்திரிகாசிரியர்.

# பூதவதி அல்லது புனிதவதி

என்னும்

## காரைக்காலம்மையார் புராணம்.

(முன்தொடர்ச்சி)

22 மற்றவர்தாம் போயினபின் மனைப்பதியா கியவணிகன்
உற்றபெரும் பகலின்கணோங்கியபே ரில்லெய்தி
பொற்புறமுன் னீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாருங் கடப்பாட்டி லூட்டுவார்.

(இ-ள்.) மற்றவர்தாம் போயினபின்—பசி மிகுதியாய்வந்த அடியவர் உணவுண்டு அம்மையாரை ஆசீர்வதித்துச் சென்றபின், வீட்டுக்குடையவனும் தனது பதியுமாகிய பரமதத்த செட்டியார் பெரும் பகல் கால (சூரியன் உச்சிக்குவந்து மேல்நோக்கும் சமயம்) த்தில் மாட மாளிகை ரூபமாய் ஓங்கிய பெரிய வீட்டினை (அதாவது தவத்திற் சிறந்தோர் ஈசுரனைக்காண அவாக்கொண்டு தவமியற்றி அவனைக் காணப்பெற்றால் பூர்வாக்ருத கர்மங்களெல்லாம் தகிக்கப்பட்டு, புண்ணியமூண்டு சதா ஆனந்தத்தை யடைவதுபோல புனிதவதி தேவியாரின் கிருஹத்துள் பசி முதலிய துன்பங்களுடன் வருபவர்கள் அஃதொழிந்து ஆனந்தத்துடன் செல்வதனால் 'ஓங்கிய பேரில்' என்றார் ஆசிரியர் ஆனதால் அத்தகைய வீட்டினை) யடைந்து, பொற்புற முன்னீராடி—உண்ணுமுன் நீராடவேண்டுவது அவசிய மாதலினால்,

"உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலுந்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றுந்
தூஉய மென்பர் தொழில்." 118

என்பதொப்ப ஸ்நான முதலியன முடித்து உணவுண்ணச் சென்றார். அதுசமயம் கற்புடையவளும் இளமைப் பருவத்தினளுமாகிய அம்மையார் கடப்பாட்டி லூட்டுவார். கடப்பாட்டி லூட்டுவதாவது:

"மணமக னுடம்பு போற்ற வல்லவண் மனைவி யேயென்
றுணர்வினர் மொழியு மாற்ற முவள்செய னோக்கிப் போலுந்
தணவறு மன்புஞ் சாந்தத் தன்மையு நன்மை யான
குணமுமோ ருருவங் கொண்டோர் குடிப்பிறந் தனைய நீராள்" 119

என்றும்,

---

118 நல்லாதனார், 119 குசேலோபாக்கியானம்.

"கணவன் றுய்த்திடக் கருத்தெ வற்றையு
மிணர்மென் கூந்தலா ரெடுத்தெடுத் தளித்
தணவ நின்றுப சரிப்ப தல்லது
குணமி லாரெனத் தடுத்தல் கொள்கையே" என்றும்,

"வாயு முன்பிணி வருத் தறிந்திடு
மாயுள் வேதிய ரகற்று மொன்றனை
நாயக கன்கொள நயந்து நிற்பனேற்
றீய தென்பர்பின் சிந்தை நோவரே" என்றும்,

"கண்டன் வேறொரு கரும நெஞ்சகம்
கொண்டு மற்றைய குன்றத் திருப்பினு
மண்டு மன்பின் யாதானும் வைத்துக்கொண்
டுண்டு பாரெனு வூட்டு நீரரே" என்றும்,

ஆணப்படுவதாலும் கற்பிற் சிறந்த காரிகையா ராயினமையாலும் கணவனை யுபசரிக்கலாயினர்.

23. இன்னடிசில் கறிகளுட னெய்துமுறை யிட்டதற்பின்
மன்னியசீர் கணவன் மனையிடைமுன் வைப்பித்த
நன்மதுர மாங்கனியி லிருந்ததனை நறுங்கூந்த
லன்னமனை யார்தாமுன் கொடுவந்து கலத்தளித்தார்.

(இ-ள்.) உண்ணுதற் கினிமை பயப்பதான சாதத்தையும், கறிவகைகளையும் வரன்முறைபாக பரிமாறியபின், பொருந்துத லுடைய தான சிறப்பினையுடைய தன் கணவனால் சிறிது நேரத்திற்கு முன் கொடுத்தனுப்பட்டு வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த நல்ல சுவையினை யுடையதான மாங்கனியை (அடியாருக்குப் படைத்தது போக) மிகுந் திருந்த ஒன்றை இயற்கை மணமுடைய கூந்தலினை யுடையவரும் பத்மினிசாதி மங்கையும், அன்னநடையும் பின்னிடும் வண்ணம் தான் நடக்கும் சமயம் பூதேவிக்குத் தன்னால் சிரமமுண்டாகாவாறு நடப்பவருமான புனிதவதியார் எடுத்துவந்து கலத்திலிட்டு உண்ணுமாறு உபசரித்தார். 'நறுங்கூந்தல்' என்றதானது பத்மினிசாதி ஸ்திரீகளுக்கு இயற்கையிலேயே மணமுண்டென்பதனை:

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்

மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே'' 120 என்றும்,

காணப்பெறுவதால் இந்நூலாசிரியராகிய சேக்கிழார் சுவாமிகளும் 'நறுங்கூந்த லன்ன மனையார்' என்றார். (தொடரும்)

வாசுதேவ ராவ் கேய்க்வார்.

## ராமச்சந்திரன் கானேக்கிச் செல்வதைப்பற்றி ஆக்ஷேபணை சமாதானங்கள்

### அல்லது

## பகவத்கீதோபதேசம்.

ராம ஸன்னிதானத்தில் கௌஸல்யா தேவியார் ஸகிக்கமாட்டாத துக்கத்துடன் கதறியழுதவண்ணங் கூறிய வார்த்தைகளைக் கேட்ட லக்ஷ்மணன் மனம் வருந்தி சீறிச்சினந்தனன். உத்தமராணியும் பெரிய தாயாருமான கௌஸல்யா தேவியாரைநோக்கி, "ஆர்யே! என் அம்ம! ஸ்த்ரீயின் வார்த்தைக்காக இந்த ராஜ்யத்தை விடுத்து வனம் போவதாய்ச் சொல்லும் தமயனுடைய வார்த்தை எனக்குக் கொஞ்சமும் கேட்கப் பிடிக்கவில்லை விஷப ஸுகத்தில் ஈடுபட்டு ஸ்த்ரீ சாபல்ய மிகுந்து புத்திகெட்டுத் தடுமாறி பெண்பாலா லேவப்பட்டு நடிக்குங் கிழட்டு ராஜாவின் வார்த்தைக்குட்பட்டு தமயன் வனம்போவது யுக்தமேயில்லை. தோஷலேச மற்றவரும், நிரபராதியும், ராஜத்ரோகம், மகாபாதக மெதுவுமில்லாதவரும், மகாபரிசுத்தமானவருமான ராம பரமாத்மாவை வனத்திற் கோட்டும்படியான காரணமென்ன? மகா காமியாய், ஸதா ஸர்வகாலமும் ஸ்த்ரீ லோலனாய் அவளுடன் (மாற்றாந்தாய் கைகேயியுடன்) கூடிக்கொண்டு உலகில் நகைப்பார்களே என்று சிறிதும் வெட்கமில்லாதிருக்கும் கிழம் எனக்குப் பிதாவாயினும், அந்தக் கிழத்தைக் கொன்றுவிடுகின்றேன். இடைவிடாமல் ராமபிரானுடன் கூடிப் பழகியிருக்கும் எனக்கு அவரிடம் எவ்விதமான பிசகுங் காணப்படவில்லையே! உலகத்தினரும் அவன்மேற் குறை கூறார்களே! சத்துருவாயிருப்பினும், பரோக்ஷத்

* ஆர்யே - பூஜ்யே; மங்களகரமானவரே.

தில் பரந்தாமன் ராமசந்த்ரனைக் குற்றங்கூறத் துணியார்களே! தேவ தேவனுக்குச் சமானமானவரும், நித்யசுத்தரும், சாந்தரும், திரிகரண சுத்தரும், ஸர்வ ருஜுவாயிருப்பவரும், குருமுகமா யெல்லாங் கற்றறிந்துத் தேர்ச்சிபெற்றவரும், சத்ருக்களிடம் வாத்ஸல்ய முள்ளவரும், அன்பே உருவாய்க்கொண்டவருமான என் அண்ணன் ராமனை எந்த விவேகிதான் காரணமில்லாமல் வனம் போவென்று சொல்லக் கூடும்? மூடனும் இத்தகைய காரியத்தைச் செய்யானே! கர்ம வசத்திற்பட்டு மயங்கும் பிதாவின் வார்த்தைக்குட்பட்டு ராமச்சந்த்ரன் தான் எப்படி ஆரண்யம் போகலாம்? வயது சென்ற கிழத்திற்கு பாலியந் திரும்பிவிட்டது; ஸதா ஸர்வதா கைகேயியின் அந்தப்புரம்தான் வாஸம்; கைகேயியின் மந்த்ரோபதேசமாம் வார்த்தையை என்னுடைய இந்த (சுட்டிக் காட்டிக்கொண்டு) ராமபிரானைப் போல் எவன்தான் காதுகொடுத்துக் கேட்க விரும்புவான்!" என்று ராமரை நோக்கி, "அண்ணா! தங்கட்கு விதிக்கலான வனவாஸ விஷயம் எவரு மறியமாட்டார்கள்; அது வெளியாகுமுன், அரசனால் முந்தியநாளில் சபையின்கண் பகிரங்கமாய்க் கட்டளை செய்யப்பட்டபடி, வஸிஷ்டாதிகளை யழைப்பித்து வைத்துக்கொண்டு, ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்துக்கொண்டு ஸர்வ ஸொத்தையும் நாமே ஸ்வாதீனஞ் செய்துக் கொண்டுவிடலாமே! மகாராஜா ஸதஸுக்கு வராமல் நமக்கெப்படி ராஜ்யம் ஸ்வாதீனப்படும் என்றால், நான் தனுஷ்பாணியாய்த் தம்பக்கலில் வந்து நின்றேனேயானால், எவன்தான் தங்களுடைய ஆக்ஞையை மீறி நடக்கமாட்டுவான்? தாம் ராஜாவா யிருக்குங்கால், எவனாவது தமது கட்டளையை மீறி நடப்பானேயானால், இந்த நகரத்தையே நிர்மானுஷ்யமாய்ப் பண்ணி, நிபாதஞ்செய்து பாழடித்து விடுகின்றேன். தீக்ஷண்யமான பாண ப்ரயோகம்பண்ணி இந்த ராஜதானியே இல்லாமல் செய்துவிடுகின்றேன். அம்மான் யுதாஜித்தை சூரனென்றெண்ணித் துணை கூட்டிக்கொண்டு பரதனை போர்புரிய வந்தாலுஞ் சரி, அவனைச் சேர்ந்தவர்கள் எதிர்த்துப் போருக்கு வந்தாலுஞ் சரி, எல்லாரையுங்கொன்று ஹதஞ் செய்கின்றேன். நாம் இனி லேசாயிருத்தல் கூடாது கூடாது! வெகு கடுமையாய்த்தானிருத்தல் வேண்டும். கேவலம் பெண்மயக்கால் அரசன் பிராந்த சித்தத்துடன் காமப்பேய் பிடித்து வனம் போகும்படி சொன்னால் தாங்கள் போகவேண்டுவ தவசியமேயோ? நாம் மீறி

ராஜ்ய ஸம்பத்தை அனுபவிப்பதை யறிந்து அரசன் கைகேயியின் தூண்டுதலினால் ப்ரதன் கக்ஷியில் சேர்ந்து நம்மை எதிர்க்கவந்தாலும் அந்த சத்ருவை பிதாவென்றெண்ணுமல் உடனே பிராணனை யிழக்க வடிக்கின்றேன். அல்லது அவரைக் கொல்லாமல் உயிருடன் கயிற்றைப்போட்டு கட்டி விடுகின்றேன். சிறிதுஞ் சந்தேகம் வேண்டியதில்லை'' என்றனர்.

இங்கே தர்ம விபாகத்தைக் கூருமலிருக்க முடியவில்லை. யுகந்தோறும் தர்மாதர்மங்கள் வகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. கிருத யுகத்தில் தர்மமே குடிகொண்டிருந்தது. திரேதா யுகத்தில் கால் பங்கு அதர்மஞ் சேர்ந்தது. ஆயினும் அந்த யுகத்தில் செங்கோலோச்சிவந்த ஸத்யவாதிகளான சூரியவமிசத்து ராஜாக்களின் ராஜ தர்மம் கால்பங்கு அதர்மத்தைப் போக்கி தர்மமே தழைத்தோங்குமாறு செய்தது. த்வாபர யுகத்தில் அரைப்பங்கு அதர்மங் கூடிற்று. ஆயினும் அக்காலத்து சந்த்ர வமிசத்தரசர்கள் அரைப்பங்கு அதர்மங்களைக் களைந்து தர்மந் தலையெடுக்கச் செய்தனர். கலியிலோ முக்கால் பங்கு அதர்மங்கூடிக் கிளைத்து, கால்பங்கு தர்மத்தை தலையெடுக்க வொட்டாமலடித்து மறையச்செய்து, அந்யாயமும், வர்ணாச்சிரமதர்ம வழுவுதலும், (வர்ணபேதமும்) அதனிமித்தமாய் கர்ம சண்டாளத்வமும் மேலிட்டு குலதர்ம சநாதன வழக்க வொழுக்கங்கள் முற்றுங்கெட்டு சீர்கேடுறுமாறு தலைகீழாய் மாறியிருக்கின்றது.

ஆனல் ஸ்ரீமத் ராமாயண கதாநாயகமணிகள் அவதரித்திருந்த திரேதாயுகத்தில் கைகேயி தேவியார் லோகாபிராமனை வனவாஸஞ் செய்யும்படி பணித்தலும், லட்சுமண ஸ்வாமி பிதாவைக் கொல்ல நினைத்தலும், ராமச்சந்திரன் மரத்தின் மறைவாயிருந்து வாலியைக் கொன்றதுமாகிய இம்மூன்று விஷயங்களும் கால்பங்கு அதர்மத்தின் பிரயோஜனமாய்க் கருதும்படிக் கிருப்பினும், தேவகாரிய முற்றப் பெறவேண்டிய காரணம், காரணங் கருதாது மானுஷ வியற்கைக் கியன்ற நடிப்பு, ராஜ்ய பரிபாலன தர்மங்கருதித் தம் அடியார்களின் சத்ருக்களைப் போக்குதலாதி மூன்று தர்மகாரியங்களே முறையே மேற்கூறியவைகட்குப் போதுமான சமாதான மெனக் கூறுதல் தகும்.

அந்த திரேதாயுகத்தில் தசரதருடைய குடும்பத்தில் பகவதவதாரத்தை எல்லாருந் தெரிந்துகொண்டனரிலர். சிலர் தெரிந்து கொண்டுமிருக்கலாம், வஸிஷ்டாதி பரமயோகிகட்கு மட்டில் தெரி

யும். இப்பூவுலகத்தி லவதரித்த பரந்தாமனைக் கபடநாடகனென்றும், லீலா மானுஷ விக்ரஹ ஸச்சிதானந்த ஸ்வரூபனென்றும் அறிந்தவர் முதியோரான ஞானவான்களேயாம்.

வான்மீகி ராமாயணம் இஹபர ஸாதகமாம் ஸர்வ ஸொத்தையும் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது: அத்யாத்ம ராமாயணத்தைப்போல் பகவத் ப்ரபாவ வர்ணன மான்மியத்தை வெளிப்படையாய்க் காட்டிக்கொள்ளாமல், கூடமாய்த் தன்னுள் அடக்கிவைத்துக்கொண்டு மனதை நிலைநிறுத்தி யுழன்றுழைத்துப் பார்ப்பவர்கட்கே பிரகாசிக்கச் செய்துகொண்டும், கேவலம் பாமரமாஞ் சனங்கட்கும் இஹஸாதகமான இன்பத்தைக் கொடுத்துக் கொண்டும் விளங்கிக் கொண்டு இருக்கின்றது.

தாய் பிள்ளைகள், அண்ணன் தம்பிகள், சதிபதிகள், பெரியோர் சிறியோர், நண்பர்கள், ஏனையோர்கள் அங்கள் தங்கள் சம்பாஷணைகளில் ஸமயோசித யுக்தாயுக்த முறைமைப்படி ஏகவசனமாயும், பகுவசனமாயும் பேசிக்கொள்வது இயல்பேயாம். இனி நாம் எடுத்த விஷயத்தைத் தொடர்வோமாக. (தொடரும்)

துறையூர் மா. சுப்பராமய்யர்.

## கடமையும் அதை நிறைவேற்றுதலும்.

கடமையாவது நாம் செய்து தீரவேண்டிய முயற்சி. அதாவது நாம் ஒருவருடைய கடமையைக் கைக்கொண்டால் அதை அவருடைய மனமானது குளிரும்படிக்கு சரிவரச் செய்து முடித்தல். இந்த முயற்சியைக் கைக்கொண்டவர்கள் ஒருபோதும் துன்பத்தை அடையமாட்டார்கள். நாம் உபாத்தியாயருக்கு கீழ்ப்படிந்து நடத்தல். இது நாம் செய்து தீரவேண்டிய கடமை.

உலகில் நாம் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வதாலும் நமக்கு மூத்தோர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்வதாலும், பள்ளியில் குருவினிடமிருந்து கற்றுக்கொள்வதாலும், அநேக கற்றுவல்ல பெரியவர்கள் எழுதிவைத்த சாஸ்திர நூல்களின் அநுபவத்தாலும் நமக்கு கடமை என்பது நன்கு விளங்குகிறது. இப்படி நாம் அறிந்த இந்த கடமையை முற்றும் சரிவர செய்தோமானால் கீர்த்தியும் பெருமையும் உண்டாகின்றது. நாம் ஒருவர் இட்ட கடமையை செய்வதில் எவ்வித துன்பங்கள் வந்தபோதிலும் அதை நாம் பொ

றுத்துக்கொண்டு, நாம் செய்து தீரவேண்டிய காரியத்தை சரிவர செய்து முடிக்கவேண்டும். உதாரணமாக உபாத்தியாயர் நமக்கு ஏதாவது இடையூறுகள் செய்தபோதிலும் அதை நாம் நம்முடைய மனசில் எண்ணுமல் இன்னும் அவருடைய மனசுக்கு சந்தோஷம் உண்டாகும்படி நல்ல முயற்சிகளை செய்ய முயலல் வேண்டும்.

பரசுராமன் தன்னுடைய தகப்பன் ஜமதக்கினி தனக்கு இடப்பட்ட கடமையை நிறவேற்றும்பொருட்டு தன்னுடைய சொந்த தாயைக்கொன்றுன். இவன் எவ்வளவு கஷடத்தைத் தரக்கூடிய முயற்சியாயிருந்தபோதிலும், தன்னுடைய கடமையை நிறைவேற்றினுன். ராமன் தன்தகப்பனுக்கு கீழ்ப்படிந்திருந்தவனுகையால் அவன் தன்னுடைய சிறியதாயாரின் வார்த்தையால் தசரதசக்ரவர்த்தி ராமனை காட்டுக்குப்போகும்படி சொன்னுர் என்று சொல்லுமுன் ராமன் தான் காட்டுக்குச் செல்ல தயாராயிருந்தான். இவன் தன் தகப்பன் கட்டளையை நிறைவேற்றவல்லவோ காடுபுகுந்தான். அரிச்சந்திரன் தனக்கு சத்தியம் பெரிதென்று தன்னுடைய நாடு பொருள் முதலிய வற்றையும் தன்னுடைய மனைவியையும், பிள்ளையையும் இழந்து இழி தொழிலையுடைய ஆளானுன். ஏனென்றுல் தான் எடுத்துக்கொண்ட கடமையாகிய சத்தியத்தை நிலை நிறுத்தும்பொருட்டு செய்தான் என்பது வெளியாகிறது. மேற்சொன்ன பெரியவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றும்பொருட்டு பல பெரிய ஒருவராலும் செய்ய முடியாத காரியங்கள் எல்லாம் செய்திருக்கிறுர்கள்.

கடமையை நாம் எவரிடத்தில் நன்ருக நிறைவேற்றுகிறேமோ, அவரிடமிருந்து புகழும், பெருமையும் நமக்கு உண்டாகிறது. எப்படி என்றுல் நாம் அவருக்குச் செய்யும் நடையுடை பாவனைகளினின்றும் அவருக்கு சந்தோஷம் உண்டாகி பின்புகழைப் பெறுகிறேம். இன்றும் நாம் கடவுளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எல்லாம் சரிவரச்செய்து வருவோமாகில் அவரிடமிருந்து அருளைப் பெற்று சுகமாய் வாழலாம்.

நாம் இப்படி செய்தற்கு அருமையாகிய கடமையைக் கைக்கொண்டு, அதை எந்தவழியாலாவது நிறைவேற்றக் கூடிய முயற்சியைத் தேட முயல்வோமாக.

தமிழபிமானி

K. சாமினுதன், இளசை.

## விக்ரஹ ஆராதனை.

கணக்கிலடங்கா ஜனங்கள் வணங்கும், கோயிலிலுள்ள தெய்வத்தை நீயும் வணங்கு.

கணக்கற்ற ஜனங்கள் வணங்க வந்திருப்பதால் பரம கருணாமூர்த்தியான கடவுள் அத்திருக்கோயிலின்கண், சுமுகராய் விளங்குகிறாரென்பதில் ஐயமேதேனு முண்டோ. அக்கடவுள் அங்கிருப்பது நிச்சயமே. அறிவில்லாதவரே இல்லை என்பர்.

சகல மதத்தினர்க்கும் கடவுள் ஒருவரே. அவ்விதமாயின் சகல மதத்தினர்க்கும் ஒரேவிதமாய் இராது, வெவ்வேறு விதமாய் இருப்பதேனென்ற கேள்வி உண்டாகலாம். அது ஏன் ஒரு குடும்பத்திற்கு தலைவனாயிருப்பவன் ஒருவனே, அவ்விதம் தலைமை பெற்றவன் ஒரு ஸ்திரீக்குப் புருஷனாயும், மற்றொருவனுக்கு தந்தையாயும், சகோதரனாயும் இருக்கின்றதில்லையா அதேபோல ஒவ்வோர் மதத்தினர்க்கும் பலவேறு ரூபமாக விளங்குகிறார். அக்கடவுள் நிற்க அக்கடவுள் எங்குமிருக்கின்றார் எனின், ஏன் நாம் அக்கடவுளைக் காணமுடிவதில்லை.

ஜலம் நிறைந்திருக்கும் கிணற்றில், இலைகளும் குப்பைகளும்மூடி நிறைந்திருந்தால், அக்கிணற்றிலுள்ள ஜலத்தை நன்று பார்க்கமுடியுமா! அந்த ஜலம் பார்ப்பவர்களுக்குத் தோன்றாவே தோன்றாது. அதுபோல், கண்ணை மறைக்கும் மாயை, நம்மிடமிருந்து ஒழிந்தாலல்லாது அக்கடவுளைக்காண்பது அரிது. எனினும், அதிக பிரயாசையுடன் ஒரு காரியத்தைச் செய்யத் தலையிடுவதைக் காட்டிலும், சிறுகச் சிறுக செய்வது உசிதம்.

கடவுளிடத்தில் பக்திசெய்து, அக்கடவுளைக் காண முயலவேண்டுவதானாலும், மனம் திடங்கொள்ளுமாறு செய்துகொள்ளுவதுமான வழி, விக்கிரகமூலமாயன்றி வேறில்லை. சில சமயத்தார் விக்ரக ஆராதனை செய்தல் பாவமெனச் சொல்லி நடத்தல் மனமூடத்தனமன்றோ இம்மூடத்தனத்திற்கு என்ன செய்வது: அறியாத் தன்மையெனவே தோன்றுகிறது. கல்லிலும், செம்பிலுமா தெய்வம் இருப்பாரென்பதையே உறுதியாய்ப் பிடித்திருக்கும் அறிவிலிகளுக்கு யாரே அறிவையூட்டுவர். சாக்ஷாத்காரனாயிருக்கும் கடவுளை அறிவதற்கு விக்கிரஹமூலமன்றி வேறில்லை. எவ்விதமெனில், ஒருவன் ஓர் பெரிய பட்டணத்தை பாராதிருப்பவன், மேலே கூறப்பட்ட பட்ட

ணத்தை எழுத்துமூலமாயும், படத்தின் மூலமாயும் பார்க்கிறான், ஆனால், அன்னவனே அப்பட்டணத்தை நேரில் சென்று பார்ப்பானேயானால், பின்னர் எதற்காக அப்படத்தின் உதவி வேண்டி வரும் வேண்டிவராது. அதேபோல், பிரும்மத்தை அறிந்தவன், விக்ரஹாராதனை செய்ய அவசியமில்லை படத்தின்கண்ணுள்ள ஓர் நகரத்தைக் காட்டு என, உபாத்தியாயர் பையனைக்கேட்கும் சமயம், அப்பையன் படத்தண்டைக்கு உடனே சென்று ஓர் குறித்த இடத்தைக் காண்பிக்கின்றான். உபாத்தியாயரும் பையனும் நம்பினதினால் அது அவர்கள் விசாரித்த பட்டணம்.

என்ன அநியாயம், ஒரு பெரிய பட்டணம் படத்தின் கண் எவ்விதமடங்கும். ஆனால் படத்தினில் காட்டுவதை ஒப்புக்கொள்வது வழக்கமேயன்றி வேறென்ன, அதேபோல் நாம் விக்கிரக ஆராதனையை ஆராதிப்பது வழக்கம். இவ்வித வழியில் ஆராதிப்பது ஜகதீசனின் தரிசனம் கிடைத்துவிட்டால், பின்னர் விக்கிரக ஆராதனையின் அவசியம் வேண்டி வராது.

ஆனதுபற்றி நாம் அவ்வீசனைக் காணும்வரைக்கும் விக்கிரக ஆராதனை செய்தே தீரவேண்டும். நிற்க,

ஒரு சிறு குழந்தையானது எவ்விதம் முதலில் சுவரைப்பிடித்து நடக்கத்தொடங்குகிறதோ அதுபோல் அக்குழந்தை நடந்து வாடிக்கையான பிறகு சுவரின் ஆதரவின்றி நடக்கமுயலுவதை நேரில் கண்டிருக்கிறோமல்லவா. இதில் குழந்தையானது சுவரைப் பிடித்து நடப்பது பிசகெனச்சொல்வது நியாயமா.

ஈஸ்வரனின் க்ருபையை யடைவதற்காக, நாம் அக்கடவுளை ஓர் விக்கிரகத்தின் மூலமாய், பிரதிஷ்டைசெய்து ஆராதிக்கவேண்டுவது ஆவசியம். புறமதஸ்தர்கள் ஏன் இதைப்பழிப்பதோ வாய்க்குக் கேடன்றி வெறென்ன.

மதம் என்பது எச்சமயம் உண்டாயிற்றோ, அதோடு வழிபாடும் உண்டாயிற்று, மதம் என்பது, மனுஷ்யன் உண்டானது முதல் தோன்றியிருக்கிறது. அது மனுஷ்யர்களைக் கௌரவப்படுத்தவும், உண்மையைத் தெரிவிக்கவும் ஏற்பட்டது.

விக்கிரக ஆராதனை யென்பது என்ன ? அதற்கும் பிரதியாராதனைக்கும் வித்தியாசம் என்ன என்றும் விஷயங்களைப் பொறுமையுடன் யோசியாமல் கெடுதல் என மாத்திரம் வெளியிடுவது மதியீனமே,

விக்கிரகஆராதனையின்றி பகவானை வழுத்தலாம் என்று நினைக்கும் பேதைகள் இப்புவியில் உண்டென்பதை இது காரணம் நாம் அறிகிரோம் விக்ரகாராதனை கூடாதெனக் கண்டித்துப் பேசகாரண மின்னதென்பதைமட்டும் நன்கு விரித்துக் கூறினார்களில்லையே.

விக்கிரகம் கடவுளல்ல. அது அக்கடவுளைக்குறிக்கும் ஓர் அடயாளம். விக்கிரகத்தை வணங்காத, குதிரை அல்லது மாட்டைவிட மனிதன் சிறந்தவனன்று. மனிதராவோர்க்கு பக்தி உண்டாவதற்கு விக்ரக ஆராதனை மூலமேயன்றி வேறுவழியில்லை என்பது எனது துணிவு.

எழுத்தும், எண்ணும் என்ற அடையாளமின்றி நம்மால் பேசுவது எங்ஙனம்? முடியவேமுடியாது. இதேபோல் விக்கிரகமின்றி நம்மால் கடவுளை வணங்க முடியாது. சகல மதங்களும், தத்துவங்களும் பகவானுடைய அடையாளங்களேயன்றி வேறல்ல. சகல வஸ்துக்களிலும் பகவான் இருக்கின்றார். சகல வஸ்துக்களும் ஈஸ்வரனிடத்தில் இருக்கின்றன.

கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருச்சுனனைநோக்கி, ஏ அர்ச்சுன! நீ இவ்வுலகிலுள்ள எல்லா வஸ்துக்களையும், தனித்தனியாய் வேறு வேறாய் எண்ணிப் பார்க்காதே. சகலமும் ஈஸ்வரனிடத்தில் இருப்பதாக நினைத்துப் பார். நான் சர்வத்திலும் இருக்கிறேன்.

S. V. Iyer, திருச்சூர்.

## ரஞ்சிதனை வாழ்த்தி வினவல்.

1. ஆடிபெற்றேமன ஆடி துலங்கிடவே
நாடிநான் ஓதுங்கால் நாயக!—ஜோடிதான்
ஆனந்தனுக் காமென்(று) ஆனந்தங் கொண்டேன்பின்
மோனந்தான் என்ன மொழி?

2. மொழிகுவேன் கேளாய்: முதுநீர் உலகில்
செழியனுல் ஆனந்தன் செல்லும்—வழிவிதிதான்
அஃதிலா ரஞ்சிதன் ஆயுங்கால் மேலன்றோ?
இஃதிலென் ஐயம் இசை.

3. பதி*நான்*கு என்னவே பாருளோர் தங்கள்
விதிவாங்கி நல்ல விருப்பைப்—பதித்திடும்

ரஞ்சிதமே வாழ்கநீ ரஞ்சிதமே வாழ்கநீ
எஞ்சலில் லாதென்றும் ஈண்டு.

4. அன்பளிக்கச் சென்னைவிட்(டு) ஆனைமலை வந்தென்னை
இன்பமுறச் செய்த இரஞ்சிதமே!—துன்பிலாது
என்றென்றும் வாழ்ந்து எளியோர் அனைவரையும்
உன்பற்றில் ஆக்குவாய் ஓர்ந்து.

5. ஓர்ந்துநான் உன்னை ஒருமொழி கேட்கின்றேன்
கூர்ந்துநீ சொல்வாய் குணமாக தீர்ந்தவென்
தந்தைதான் முன்னாள் சமைத்திட்ட பாவினங்கள்
உந்தையார் ஏற்பரோ? ஓது.

6. ஓதினால் யான்தருவேன் உற்றவெனிஸ் வணிகன்
தீதிலா தோங்கிய சீரதைவெண்—பாவினால்
பாடிய பாட்டையும் பாரிலுன் னாமுலையாள்
தேடிய சேய்பாவோடும் சேர்த்து.

S. ஆதிநாராயணன் பிள்ளை,
உபாத்தியாயர், ஆனைமலை.

---

## கொடிய குணங்கள்.

அவை இராகம், துவேஷம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மார்ச்சரியம், ஈரிஷை, அசூயை, டம்பம், தர்ப்பம், அகங்காரம் எனப் பதின்மூன்றும்.

இராகம்—தனக்கு ஈசுர சங்கற்பத்தால் கிடைத்த மனைவியை விட்டுவிட்டு மற்றவன் தாரத்தை இச்சிக்க நினைப்பது அல்லது இச்சிப்பது—இதனால் இராவணன் கெட்டான்.

துவேஷம்—தனக்கு உபகாரம் செய்தவர்களுக்கு அபகாரம் செய்ய நினைப்பது—இத்தீய குணத்தால் இரணியன் கெட்டான்.

காமம்—எம்பெருமான் தனக்குக் கடாக்ஷித்தது போதுமென்று நீர்க்குட் பாசிபோ லிராமல் புத்ர களத்ர தன தான்யம் மாதா பிதா வஸ்திர வாகன பூஷணாதிகளும் மேன்மேலும் வேண்டுமென்று விரும்புவது—இக்குணத்தால் நரகாசுரன் கெட்டான்.

குரோதம்—சகல சேதனாசேதனங்களுக்கும் பிதாவான சர்வேஸ்வரன் விணக்கீடாகத் தந்தருளிய தம்மையும் தம்பொருளையும்

கெடுக்க நினைத்திருப்பவரை எவ்விதமேனும் கொலை, மோசம் செய்ய வேண்டுமென்றெண்ணுவது—இக்கொடிய குணத்தால் கஞ்சன் முதலியோர் கெட்டனர்.

உலோபம்—பரம தயாளுவான பரந்தாமன் தன்னிடத்திற் செய்த கடாக்ஷத்தால் தனக்குண்டான விசேஷ சம்பத்தில் லேசமேனும் பிறர்க்குக் கொடுக்கமாட்டேனென்றெண்ணுவது.

மோகம்—பகவனாகிய பரமேஸ்வரன் தன் ஜன்மாந்தர வினைக்கநுகுணமாய்த் தனக்குக் கொடுத்துள்ள மனைவி மக்கள் முதலானவர்களுக்கும், அட்டை, எறும்பு, பக்ஷி, மிருகம், அலகையாதிகளுமான உயிர்ச்சார்பிலும் மண், பொன் முதலான பொருட்சார்பிலும் அளவுகடந்த ஆசைவைத்து தன்னுயிரையும் கருமத்தையும் கொன்றுவது அவற்றை விடேனென்று வெறிகொண்டு ஒருவனைத் திரிந்து அலையச்செய்வது—இதனால் வசிட்டரும் துரோணரும் மற்றும் பலரும் துக்கப்பட்டனர்.

மதம்—ஒருவன் தனக்குள்ள வீரத்தையும் ஜாதியையும் ஐஸ்வர்யத்தையும் கல்வியையும் அதிகாரத்தையும் அழகையும் நினைந்து பலமுள்ள விருக்ஷம்போல் நிலம்நோக்கி வணங்காமல் "எல்லார்க்கும் பணிதல் நன்றா மவருள்ளும், செல்வர்க்கே செல்வந் தகைத்து" என்ற நீதியை யிழந்து ஜேஷ்டா தேவியாகிய மூதேவியின் பஞ்சகோச புத்திரனால் அடைப்புண்ட கண் வாய் செவிகளை யுடையனாகச் செய்கின்ற மனோவிர்த்திக்குப் பெயர்—இக்கெட்ட குணத்தால் கார்த்தவீரியார்ச்சுனன் பரசுராமனால் கெட்டழிந்தான். தேவேந்திரனும் தூருவாசரிடம் சாபம் பெற்றான்.

மார்ச்சரியம்—தன்னைப் பார்க்கினும் மேலான கல்வி, செல்வம், வீரியம் இவற்றால் விசேஷ மரியாதை யடைந்துள்ளவர்களைக் கண்டு அவர்களும் அவ்வளவு சிறப்படைதலை நாம் உயிரோடிருந்தும் பார்த்திருக்கலாமாவென்று புழுங்கி வெந்து நிரபராதிகளாகிய அன்னவர்க்குத் தீங்கிழைக்க வேண்டுமென்று நினைப்பது—இதனால் சிசுபாலன் சிந்தை நொந்தான். சுக்கிரன் கண்ணிழந்தான்.

ஈரிஷை—தான்செய்த பகவத் பாகவதாபசாரத்தால் தனக்கு நேர்ந்துள்ள துக்கம் பிறர்க்கும் வரலாகாதா? இவர் இன்பம் நுகர்ந்து வாழலமா என்றெண்ணுவது—இதனால் வாணாசுரனைக் கெடுக்க

நினைத்த அருணுஷகன் நாசமடைந்தான். காமதேனுவால் விஸ்வாமித்திரரும் துக்கப்பட்டார்.

அசூயை—தனக்குமேல் சமஸ்த விபவங்களினும் சர்வோத்க்ருஷ்டசாலிகளா யுள்ளவர்களைக்கண்டு நொந்து தானுமவர்களைப் போலாகிய மாத்திரத்தில் அவர்களை நாசம் செய்துவிட்டுத்தான் சந்தோஷிப்பேன் இதனிடையில் யான் களித்திரேனென்று நினைப்பது இதனல் பவுண்டரீகவாசுதேவன் சிவபிரானைநோக்கி பனிரண்டு வருடம் நேர்தவம் செய்து கண்ணனைப்போல் ரூபம்பெற்று இறுதியில் நாசமடைந்தான்.

டம்பம்—தன்னைக்கண்ட யாவரும் பெரிதும் சிலாகிக்கவேண்டுமென்றெண்ணி தன் நிலைமைக்குமேற்பட்ட ஆரவாரம்செய்து வார்த்தையாலும் வேஷத்தாலும் ஒழுக்கத்தாலும் வீண்பெருமையை வெளியில் காட்டிக்கொள்ள முயல்வது—இந்தக்குணத்தால் விஸ்வாமித்ரரிடம் கலைபயின்ற காலவனென்கின்ற பிராமணன் அவமானப்பட்டான்.

தாம்மம்—ஒருவன் தனக்குள்ள சமஸ்த செல்வங்களையுங்கண்டு மகிழ்ந்து இச்செல்வத்திற்கு உலகினரால் எப்போதாயினும் கெடுதி நேரிடும். ஆகையால் எளியவர்களை மாத்திரம் இருக்க வைத்து மற்ற யாவறையும் கொன்றுவிட்டால் நாம் மாத்திரம் சிறப்பாக வாழலாமென்றெண்ணுவது—இதனல் கம்சன், பூதகி, சகடாசுரன், அனலாசுரன், பகாசுரன், குக்குடாசுரன், வற்சாசுரன், உரகாசுரன், கார்த்தபாசுரன், சதகந்தரன், திருணவர்த்தனகேசி முதலினோர்மாண்டனர்

அகங்காரம்—உலகத்திலுள்ள வீரர்கள் யாவர்க்கும் மேலானவன் நாமேயொழிய நமக்குமேல் ஒருவருமில்லையென்று அணைகடந்து நிமிர்கின்ற செருக்கோடு ஒருவன் இவ்வுலகிலுள்ள சாமானியர்களையெல்லாம் வெல்லவும் அவர்களை கொல்லவும் நினைப்பது—இதனல் சராசந்தன், மதுகைடவர், வாலி முதலியோர் கெட்டனர். எனவே இக்கொடிய குணங்கள் கொண்டதனல் இராவணன் முதல் ஈருகவுள்ள இவர்கள் இனியிலா அவமானம், அவமரியாதை, அநீதி, அனர்த்தம், அதர்மம், அசத்தியம், அசேதனம், அதோகதி என்னும் இழிகுணங்களுக்கிலக்காகி இறுதியில் அபகீர்த்தியையும் வீணே விளைவித்துக்கொண்டார்கள். ஆகையால் 'தினைவிதைத்தவன் தினை எடுப்பான், வினைவித்தவன் வினை எடுப்பான்' என்றிருத்தலால் கொடிய வினைகளை விளைவிக்கும் இத்தீயகுணங்களைக் கனவிலும் நினைவிலும் நாம் கருதலாகாது.

கே. ஆர். கணபதி பிள்ளை, தமிழ் வாசகசாலை,
சுண்டகாமுத்தூர்.

## உபதேச ரத்ன மாலா.

மலர் 1. 'இளமையில் மனதை ஈசன்பால் செலுத்துக.'

'செடியாய் வளையாதது மரமாய் வளையாது' மெல்லிய இள மூங்கிலை பல்லக்கிற்காக குறவர்கள் தங்கள் இஷ்டப்படி வளைக்கிறார்கள். மரமாய் முற்றி வளர்ந்த மூங்கிலை அவ்வாறு வளைக்க இயலுமோ! வளைத்தால் மளக்கென முறிந்துபோகும். அதுபோல இளமை முதலே சிறுவர்களை ஈசனை பஜிக்கும்படி பழக்கிவிட்டால் பிறகு மாருது. இளமையில் மனதைத் திருப்புவது சுலபம்.

மலர் 2, 'இல்வாழ்வு ஓர் குமிழியே,'

'இனிதெனத் தியங்கும் இல்வாழ் வோவெனில்
கனிமுகச் சிறுவர் களித்தா டுகையில்
ஆகாயத்துள்தம் ஆவியி னுயிர்ப்பால்
ஏகமிற்க எழுப்பும் குமிழியே
எங்கும் பின்தொடர்ந் தேகிச் சென்றே
தங்களில் எவரதைத் தக்கவிசையில்
எழுப்ப வல்லார் எனவழக் கிடுவர்
விழுப்பொன் னிழைத்த வீறுபோ லாங்குத்
தன்னியல் கதியில் தங்குவ தாகச்
சின்னேரம் அது தென்படினும் மிக
மெல்லிய தாகையால் வெட்ட வெளியில்
வல்லே யுலாவ வலியுடைத் திடினுமென் ?
இச்சிறப் பினிலே என்றுந் தங்குமோ ?
மெச்சிடும் போததை வெகுவாய் மனதில்
ஆதியில் ஒன்றும் அலதால் அஃது
ஏது மிலதாய் இறுதியில் முடியுமே.'.

மலர் 3. 'நிச்சயமாய் தெரிந்ததைமட்டும் தெரியும் என்று சொல்.'

இது பெரும்பாலும் சிலரிடம் இருப்பதில்லை. யாராகிலும் ஒருவன் நம்மை ஒரு ஸமாசாரத்தைக் கேட்டால் அது நமக்குத் தெரிந்தாற்றான் தெரியும் என்று ஒப்புக்கொண்டு மறுமொழி பகரவேண்டும், தெரியாம லிருக்கையில் தெரியும் என்று சொல்லவே கூடாது. நாம் சொன்னது நிஜம் என்று நம்மை நம்பி அந்நம்பிக்கையின்மேல் நடந்து கடைசியாய் அது அவனுக்குத் தெரியாது அவன் பேச்சைக் கேட்டு நாம் மோசம் போனேம் என்று நம் பேச்சைக் கேட்டவனுக்கு தெரிந்துவிட்டால் நம்முடைய கௌரவம் என்னகும். ஆதலால் அதையிட்டு அவமானமே வந்துசேரும். (தொடரும்)

சங்கரப்ப ஸ்ரீனிவாஸ், அடையலூர்.

## சூது விரும்பேல்.

ஆழியாற் சூழப்பட்ட இந்நில உலகின்கண் அவதரித்த மானிடர்களாகிய நாம் புரியும் பாவச் செய்கையில் முதன்மையானது சூதாகும். இச்சூது தன்னை விரும்பியவர்களுக்கு எண்ணில்லாத துன்பங்களையும், புன்மையையும், வறுமையையுந் தந்துநிற்கு மியல்பினையுடைத்து.

"சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்."

தருமத்தை வேருடன் பெயர்த்தும், கொடிய நரகத்திற் சேர்த்தும் அன்பை நீக்கிக் கோபத்தைத் தந்தும், எங்கும் பகையை யுண்டாக்குவது இப்பொல்லாச் சூதன்றோ! சூது விளையாடுவதில் வல்லவனாயினும் சூதை விரும்பாதிருத்தலே மேலாகும். ஒருதரம் சூதாடி வெற்றியை யடைந்த பின்னரும் பலமுறை வெற்றியை விரும்புவது இழுக்காகும். "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்பது போல் சூதாடுங்கால் பலதடவை வெற்றியை விரும்புவது புட்கரன் பலதடவைகளில் வெற்றியை விரும்பி அத்தடவைகளில் வெற்றியை யடைந்தானும் இறுதியில் தோல்வியையே யடைந்தான் என்பது கண்கூடு.

அழகைக் கெடுத்தும், பொய்யனுகச்செய்தும் மானத்தை அழித்தும், பொருளைப் பகைவர்கண் நிறுத்தியும், வறுமையை யுண்டுவது இவ்வன்மைச் சூதன்றோ?

"பொருள்கெடுத்தும் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்லலுழப் பிக்குஞ் சூது."

இன்னும் இச்சூதின்மீது இச்சைவைத்து விளையாடுபவர்களுக்கு இம்மையில் பெற்றோர்களாலும், பந்துக்களாலும், உலகத்தவர்களாலும், இகழப்பட்டும்; போலீசார் வசப்பட்டு, அடிக்கப்பட்டும், மானமழிந்து சிறைபட்டும், மறுமையில் சகிக்கமுடியாத இன்னலைத் தராநிற்கும் நரகக் குழியில் வீழ்ந்தும் வருந்துவர்.

இப்பொல்லாச் சூதைக் காலப்போக்கின் நிமித்தம் விளையாடினால், அழகுங் கல்வியுஞ் செல்வமும் ஊரும், உடையும் ஆகிய இவ்வைந்தும் அவனைச் சாராவாம்.

"உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்."

ஈண்டு யுதிஷ்டிரர், நளச்சக்கரவர்த்தி சரித்திரங்களுங் காணத் தக்கது.

சூதாடுவதினால் மானமழிந்து மதிகெட்டு பொருளை யிழந்து போக நேரிடும். "மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே." ஆனதுபற்றி இம்மையில் வாணாளை வீணாளாக்காமல் சூது, களவு, கொலை முதலிய இப்பாபச் செய்கைகளை அறவே விடுத்து மறுமையி லின்புற்றிருக்குமாறு தானதர்மங்களைச் செய்து, நாடோறும் மாற் றறியாத செழும் பசும்பொன்னனாகிய மாணிக்கத்தைத் துதிப்போ மாக! சுபம். சூதுங் களவுந் தவிர்.

எஸ். என். இராமு, கூறைநாடு,

---

## ஏழைகள் குடியிருப்பதற்கு வீடுகளை நிர்மாணித்தல்.

கிராமாந்தரங்களிலும் நகரங்களிலும் ஏழைகள் குடியிருக்கும் வசதிகள் பெரும்பாலும் சுகாதாரமற்றவைகளாகவே யிருக்கின்றன. இவர்களுக்கு கிடைக்கும் ஊதியம் மிகவும் சொற்பமேயாதலால் தங் கள் ஜாகைகளைச் சுத்தமாகவைத்துக்கொள்ளவும், சற்று நாகரீகமாக ஜீவிக்கவும் இயலாதவர்களா யிருக்கின்றனர். கிராமாந்தரங்களினின் றும் மற்ற இடங்களினின்றும் ஏராளமான ஜனங்கள் தத்தம் ஜீவ னத்துக்காக நகரங்களுக்குச் செல்கின்றார்கள். ஆதலால் கிராமாந் த்ரங்களைக்காட்டிலும் நகரங்களில் ஏழைகளின் குடிவசதிகள் சீர் கேடடைய ஏதுவாகும். இவர்கள் நகரங்களில் பற்பல தொழிற்சாலை களில் அமர்ந்து வேலைசெய்வதால் தொழிற்சாலை முதலாளிகள் இவர்களின் சுகாதாரத்தைக் கவனித்து தக்க பரிகாரங்களைத்தேட வேண்டியது அவசியமாகும். ஏனெனில் தொழிற்சாலையின் வேலை கள் சிறப்பாக நடப்பதும் பாதகப்படாமலிருப்பதும் தொழிலாளி களையே பொறுத்திருக்கின்றது. தொழிலாளிகளின் தேகாரோக் கியத்தையும் நல்வாழ்வையும் முதலாளிகள் கவனிக்கத் தவறினால் தொழிலாளிகள் பல கஷ்டங்களுக்குள்ளாகி அது காரணமாகத் தொ ழிற்சாலையின் வேலைகள் பாதகப்பட்டு முதலாளிகளுக்கு கஷ்டமுண் டாவது நிச்சயம். ஆகவே, முதலாளிகள் தம்மிடம் தொழில் செய் யும் ஏழைகளின் சௌக்கியத்தையும், நல்வாழ்வையும் கருதி அவர் களுக்குத் தம்மாலான உதவியைச்செய்ய வேண்டியது மிகவும் அவ சியம். இப்படி செய்வதினால் முதலாளிகளுக்கு நஷ்டமேற்படு மென்று எண்ணுவது தவறு.

நகரங்களில் ஜனநெருக்கம் அதிகமாயிருக்குமானல் கவர்ன்மெண்டார் அவற்றை விசாலப்படுத்த ஏற்பாடுகளைச்செய்வதுண்டு. அப்பொழுது பல புதிய தெருக்களும் இன்னும் மற்ற சௌகரியங்களும் ஏற்படும். இவ்விதம் விசாலிக்கப்படும் பாகங்களில் ஏழைகளுக்கு இடம் கிடைப்பதில்லை. கொஞ்சம் செல்வமுள்ளவர்களே. அங்கு இடம் வாங்கித் தங்கள் இஷ்டப்படி வீடுகளைக்கட்டிக்கொள்ளுகிறார்கள். இன்னும் நல்லமாதிரி வீடுகளைக்கட்டி வாடகைக்கு விடுகிறார்கள். இன்னும் சிலர் தங்கள் பணத்தை பூசொத்துக்களின் மேல் போடக்கருதி இப்படிப்பட்ட இடங்களில் வீடுகளை வாங்குகிறார்கள். ஆனல் ஏழைகளோ தமக்குக் கிடைக்கும் ஊதியம் ஜீவனத்துக்கே போதாததாயிருக்க எவ்வாறு அவ்விடங்களில் வீடுகளை வாங்கக்கூடும். இவர்கள் அதிகமான வாடகை கொடுத்து அவ்விடங்களில் குடியிருக்க முடியாது.

சில நகரங்களில் கவர்ன்மெண்டார் பொது ஜன சுகாதாரத்திற்குப் பாதகமேற்படாமலிருக்கும்பொருட்டு நகரததிலுள்ள சில சுகாதாரமற்ற வீடுகளையும் சந்துகளையும் இடித்துப்புதிதாய் வீடுகளைக் கட்டியும் சிலவிடங்களை அப்படியே காற்றோட்டத்திற்காக விட்டும் வைக்கிறார்கள். இப்படிச்செய்வதனல் இவ்விடங்களில் முன்னே குடியிருந்தவர்கள் வேறு ஏற்கெனவே குடியுள்ள வீடுகளுக்குப் போய் சேருகிறார்கள். இதனல் ஒரே குடித்தனத்திற்கு போதுமான இடத்தில் இரண்டு மூன்று குடித்தனங்களாகயிருக்க நேரிடுகின்றது. இன்னும் சிலவிடங்களில் அறை ஒன்றுக்கு ஒரு குடித்தனமாக இருக்க காணலாம். இப்படிப்பட்ட வீடுகளில் பகற்காலங்களில் புருஷர்கள் வெளியே போய்விடுவது காரணமாக அதிக கூட்டம் தெரியாவிட்டாலும் இராக்காலங்களில் ஜனநெருக்கத்தைக் காணலாம்.

வீடுகளில் அதிகமாகக் குடித்தனங்க ளிருப்பதனல் அங்கு வசிப்பவர்களின் தேக சுகாதாரமும் சன்மார்க்கமும் பாதகப்பட ஹேதுவாகின்றது. விவசாயத் தொழிலையுடையவர்கள் இத்தகைய கேடுகளினின்றும் சற்று விலகியிருக்கக் கூடுமாயினும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் எவ்விதத்திலும் இக்கேடுகளுக்கு ஆளாகாமலிருக்கவியலாது. வீடுகளில் அதிக குடித்தனங்கள் சேருவதனல் இன்னும் பலவித கேடுகளில் அம்மை, காலரா, ப்ளேக் முதலான தொத்து வியாதிகள் வெகு இலேசாகப் பரவக்கூடும்.

மேலே குறிப்பிட்ட கஷ்டங்களை நிவிர்த்திக்க மார்க்கங்கள் எவை என்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது அவசியமாகும். முற்கூறியபடி ஒரே வீட்டில் பல குடித்தனங்களாக யிருந்து கஷ்டப்படும் ஏழைகள் தங்களுக்கு சௌகரியமானபடி வீடுகளைக் கட்டிக்கொள்ள இயலாது. இவர்களுக்குத் தொழில்செய்து கிடைக்கும் பணம் ஜீவனத்திற்கே போதாததாயிருக்க, மற்றைய சௌகரியங்களுக்குத் தமது முதலாளிகளையே எதிர்பார்க்கவேண்டி யிருக்கிறது. முதலாளிகளின் தொழிலின் முற்போக்கும் லாபமும் தொழிலாளிகளின் நல்வாழ்வைக்கோரி யிருக்கவேண்டியது அவசியமாகும்.

தொழிலாளிகளின் நன்மையைக்கருதி கவர்ன்மெண்டார் அவர்களுக்குத் தனியே வீடுகளைக் கட்டிக்கொடுத்து அவர்களின் சக்திக்கியன்றவாறு வாடகை வசூலிக்கலாம். இவ்விதம் கட்டப்படும் விடுதிகள் தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே யிருக்கவேண்டும். சிறிது தூரமா யிருக்குமானல் அவர்கள் காலதாமத மில்லாமல் தொழிற்சாலைகளுக்குவர சௌகரியங்களை யேற்படுத்தவேண்டும். இன்னும் இவ்விடுதிகள் மற்ற ஜனசமூகத்தார்களினின்று சற்றுவிலகி யிருப்பது நல்லது. ஒவ்வொரு வீட்டிலும் அதிகக் குடித்தனங்கள் இராமலும் தொத்து வியாதிகளுக்கு இடங்கொடுக்காமலும் இருக்கவேண்டும். அப்போதைக்கப்போது சேரும் அசுத்தங்களை வெளியேற்றுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஜனங்களின் உபயோகத்திற்காகச் சுத்தமான தண்ணீர் குழாய்களின் மூலமாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரவேண்டும். குடிவகைகள் முதலியன இவர்களுக்கு சமீபத்தில் கிடைக்கும்படி யிருக்கக்கூடாது. இவர்களின் பிள்ளைகள் படிப்பதற்கான பள்ளிக்கூடங்களைப் போதுமான அளவு ஸ்தாபிக்கவேண்டும். இன்னும் இவர்களின் உபயோகத்திற்காக கோயில் முதலியவற்றையும் ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் இவர்கள் குடியேறியிருக்கும் பாகத்தை அடிக்கடி பார்வையிட்டு எல்லாம் நல்ல சுகாதார நிலைமையி லிருக்கச்செய்யவேண்டும். வாடகைகள் வசூலிக்கவும் பொறுப்பு வாய்ந்த ஒரு உத்தியோகஸ்தரை ஏற்படுத்தவேண்டும்.

மேலே குறிப்பிட்டபடி தொழிலாளிகளுக்குச் சௌகரியங்களை செய்துகொடுத்தால் அவர்களின் தேகசௌக்கியம் நல்ல நிலைமையிலிருந்து தத்தம் வேலைகளைச் சரிவர செய்வார்களென்பதில் ஐயமில்லை. இந்த நிலைமையில் இவர்கள் தொழிற்சாலைகளில் சிறந்த

வேலைகளைச் செய்யக்கூடியவர்களா யிருக்கின்றபடியால் இவ்வளவு சௌகரியங்களையும் செய்துகொடுத்து கவர்ன்மெண்டார் தொழிற் சாலை முதலாளிகளிடமிருந்து கொஞ்சம் பணவுதவியையும் பெறலாம். கூலிவேலை செய்பவர்கள் பெரும்பாலும் ஏழைகளானபடியாலும் அவர்களுக்குத் தக்க சுகாதாரமுள்ள விடுதிகளைக் கட்டிக்கொடுத்து, அவர்களின் தேகசௌக்கியம் சீர்கேடடையாமல் பாதுகாத்து வருவதனாலும் அவர்கள் நன்மையடைவதோடு அவர்களை அமர்த்திக்கொள்ளும் முதலாளிகளுக்கும் தொழிற்சாலை வேலைகள் சிறப்பாக நடந்தேறித் தக்க லாபம் கிடைக்க வழியுண்டு.

பழ. ச. கருப்பஞ்செட்டியார், கீழச்சிவல்பட்டி.

## ஜீவகாருண்யம்.

ஜீவகாருண்ய மென்பது சகல ஜீவஜெந்துக்களிடத்திலும் அன்புடையதேயாம். ஆகையால் மானிட ஜென்மமெடுத்த ஒவ்வொருவரும் ஜீவகாருண்யத்தை கடைபிடித்து ஒழுகவேண்டும். ஒவ்வொரு உயிருள்ள ஜீவன்களையும் கண்ட மாத்திரத்தில் அவைகளுக்கு யாதொரு தீங்கும் செய்யாமல் தம்முடைய ஆத்மாவை எவ்வாறு நேசிக்கின்றாயோ அவ்வாறு நேசிக்கவேண்டும். அவ்வாறுசெய்யாவிடில் நாம் மானிடஜென்ம மெடுத்ததில் யாதொரு நன்மையும் உண்டாகாது. ஜீவகாருண்யத்திற்கு முக்கியமானது கருணை, ஈவு, இரக்கம், பச்சாதாபம், தயாளகுணம், இவைகளே முதன்மையானவைகள். மேற்கண்டகுணங்கள் ஒருவரிடத்தில் இல்லாவிடிலோ ஜீவகாருண்ணியத்தைக் கடைப்பிடித்து ஒழுகமுடியாது. இதனாலன்றோ தாயுமான சுவாமிகளும்

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவியே
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ
யாதுவருமோ அறிகிலேன்"

என்று திருவாய் மலர்ந்தருளினர் ஆதலால் அரிய ஜென்மமெடுத்த நம்மானிட தேகத்திற்கு இடைவிடாது மோட்சத்தையடைய சீவகாருண்யத்தையும் தருமத்தையும் கடைபிடித்து ஒழுகுவோமானல் நாம் மோட்சத்தையடையலாம்,

மேல்கண்டவாறு கடைபிடித் தொழுகாவிடிலோ நாம் பெரும் நரகத்திற்கனரோ ஆளாகவேண்டும்" இதற்கு ஒரு திருஷ்டாந்தம்

கூறுவோம், அதாவது நேப்பாள தேசத்துக்கடுத்த ஓர் பட்டணத்திற்கு இறைவனும் அமைச்சனும் தன்னகருக்கிருகாத தூரத்திலிருக்கும் ஓர் பத்திரகாளியின் கோவிலுக் கிரவில் இருஜாமங் கழிந்தபின் இருவரும் சென்று காளியைப் பூசித்து தங்கள் இஷ்டகாரியார்த்தத்தை முடிப்பிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொண்டு வந்தார்கள். இவ்வாறு பனிரண்டாண்டானதின்பின் ஒருநாள் காளி பிரசன்னமாகி க்ஷணநேரத்திற்குள் எனக்கோர் நரபலி கொடுப்பாயாகில் உன்னிஷ்டம் பூர்த்தியாகுமென்று நவில, அரசன் மந்திரியைநோக்கி இதற்கென்ன செய்யலாமென, அமைச்சன் நாம் நகரிற் போய் கொண்டுவருவதற்குள் சூரிய உதயமாகும். யாதொரு தடையுமின்றி என்னை பலிகொடுத் தமதிஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளுமென, அரசன் நாமிருவரு மல்லவோ பன்னிரண்டாண்டாகப் பூசித்து வந்தோம், அப்படியிருக்க நீரிப்படிச் சொல்லுவ தழகல்ல. ஆகையால் வேறு மனிதனையே தேடவேண்டுமென துணைவன் நம்மிருவரன்றி வேறு மனிதரில்லையே. நாம் என்ன செய்பலா! என்று கவலையுறும் போது அரசன் கோவிலில் அர்ச்சனைசெய்யும் பிராமணனை பலியிடுவோமென துண்ணியர் பிரமஹத்தி பொல்லாதென்றுரைக்கும் நீதி நூலை கற்றறிந்த நாம் இவ்வாறு கொடியபழிக்கு ஆளாகலாமோவென அரசன் நீர் சொல்வது உண்மையானாலும் விருத்தாப்பியனாகிய இப் பிராமணனை கொல்வதால் வரும் பாவம் அவன் தனயனுக்கு நமக்கு கிடைக்கும் வரத்தில்பாதி கொடுத்தால் இந்தபாவம் விமோசனமாகுமென்று அமைச்சனிடத்தில் சொல்ல, உடனே மந்திரி, பூசுரனை நோக்கி அரசனின் விண்ணப்பத்தைதெரிவிக்க, பூசுரன் இனி நமக்கு முடிவுகாலமாயிருந்தபோதிலும் இக்காளி என்னைத்தானா பலிகொள்ள வேண்டுமென்று கோபமேலிட்டுக் காளியின் கன்னத்தி லறைந்து இந்த எழுபது ஆண்டாக உன்னைப் பூசித்த என்னைத்தானா நீ பலி கொள்ளவேண்டுமென்று உன்னினுப். நீயும் உன்கோவிலும் பாழாக போகக்கடவது என்றறையும்போது காளி பிரசன்னமாகி ஒ மறையோனே! நீ முற்பிறப்பில் சூத்திரனாக யிருந்து உன்விருப்பம் பூர்த்தியாகும்பொருட்டு இரண்டாடுகளைக் கொண்டுவந்து என் முன்னால் இரண்டையும் ஒரே வெட்டாகவெட்டி எனக்குப் பலிகொடுத்தாய். அவ்விரண்டும் இவ்வூருக் கரசனு மமைச்சனுமாகி பலிக்குப்பலியாக உன்னைவெட்டத் துணிந்தார்கள். என்மேல் முனிவு கொள்ளாதே.

என்று மறைந்தருளினவுடன் மறையோன் அரசனமைச்சனை விளித்து "நீங்களிருவரும் ஏககாலத்தில் 'என்னை வெட்டுகிறேன்" என்றுவாக்களித்தால் தடையின்றி உங்களிஷ்டத்துக் குட்படுகிறேனென்ன, அரசனமச்சனும் ஆடுகளை வெட்டினவன் அந்தணனுய்ப்பிறந்தும் கொலைபாதகம் விடாமல் அவ்வாட்டின் பிறப்பான நம்மால் மடிய நேரிட்டதே என்று கவலையுறும்போது ஒருவாறு தைரியத்துடன் இருவரும் கூடி பூசுரனை ஒரே வெட்டாக வெட்டி, காளியை துதித்தார்கள். உடனே காளி பிரசன்னமாகி என்னவரம் வேண்டுமென்றறைய அரசன் இவ்வந்தணனை எழுப்ப வரம்தாரும். என் மந்திரியினிஷ்டத்தைப் பூர்த்திசெய்யும் என, இரண்டு வரங்களையும் அரசனுடைய பக்திக்கு மெச்சிக் கொடுத்து மோட்ச வீட்டையடையும்படியாக மூவருக்கும் வழங்கிவிட்டு மறைந்தருளினுள். ஆதலால் கண்ணியமுள்ள சகோதர சகோதரிகள் ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்தொழுக வேண்டுமாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

வி. முத்தையா பிள்ளை.

---

## இரஞ்சித ரத்ன மாலா.

### மலர் 4.

1. எங்கே.

உலகத்தில் உண்மையே பேசுவோரும் யோகம் கைவரப் பெற்றவர்களும் இல்லாமற் போகவில்லை. 'எங்கே' என்று வெகு சீக்கிரத்தில் கேட்டுவிடுகிறார்கள். அவர்களெல்லாம் 'நான்தான் சத்யவந்தன், நான்தான் ஞானி' என்று நம்முன்வந்து பறையடிப்பார்களா? எவ்வளவோ சந்யாசிகளை நாம் பார்க்கிறோம். அவர்களுள்ளும் மாசற்றமணிகளு முண்டு. உடைந்த கண்ணாடித் துண்டுகளுமுண்டு. கண்ணாடியை நினைத்து அபூர்வ ரத்தினங்களையும் தூஷித்துவிடுவதா? ஞானிகளைத் தூஷித்தல் அபசாரமானதொரு செய்கை. 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ?' என்பதை நினைக்காமல் எவரைக் கண்டாலும் 'இந்தக்காலத்திலாவது ஞானியாவது! போடா போடா! எல்லாம் வயிற்றிற்காக வெளிவேஷமே யொழிய உண்மை ஞானிகள் கலிகாலத்தில் எங்கே இருக்கிறார்கள்' என்று கூறிவிடுகிறார்கள். 'ஞானியாயிருந்தால் இங்கு எதற்கு வருகிறார்கள்? காட்டில் ஏகாந்தமாக இருக்கமாட்டார்களா?' என்கிறார்கள். பிராரப்தத்தை யது

பவிக்கும்பொருட்டு அன்னோர்கள் இங்கு உலவி நமக்குத் தரிசனங் கொடுக்கிறார்கள். இல்லையெனில் நமக்கு அந்த பாக்கியம் கிடைப்ப தரிது.

2. ஒருவர் கேட்பதற்கு முன்னர் நியாயசாஸ்திரத்தை வியாக் யானம் செய்வது அவ்வளவாக ப்ரயோஜனமில்லை. முதலில் நாம் அந்நீதிப்படி நடக்கிறோமா என்று நம்மை நாமே சோதித்துக் கொண்டு பின்னர் மற்றவர்கட்கு நீதி போதிப்பதுதான் சிறந்தது.

3. நமது வருவாய்க்குத் தகுந்த செலவு செய்யாமல் ஊரார் மெச்ச டாம்பீக வாழ்க்கை நடத்துவது, உள்ளே புரையோடும் புண்ணை வைத்துக்கொண்டு மேலே அலங்காரம் செய்வதுபோலாம். வருவாய்க்குத் தகுந்த செலவியற்றினதால் யாதொரு தாழ்மையுமுண் டாவதில்லை. 'வறுமையிற் செம்மை'யா யிருத்தலே சுகத்தைக் கொடுக்கும். அதன்றி, 'ஊர்மெச்சப் பால் குடித்தல்' இருப்பதுந் தொலைக்கும் வழிதான். பின்னர் 'உள்ளதும் போச்சு நொள்ளைக் கண்ணு' என்றாகவேண்டியதுதான்.

4. ஒருவர் வெகுநாள் காப்பாற்றிவைத்த ஒருவஸ்துவை, அல் லது மிகுந்த பிரேமையை வைத்திருந்த பொருளை, மற்றொருவர் வெகுசீக்கிரத்தில் அழித்தோ அல்லது கெடுத்தோ விடுகிறார்கள். அப்பொழுது முன்னவர்க்கு வரும் கோபம் இவ்வளவவ்வளவல்ல. என்செய்வது?

ஆதலின், எதையும் அழித்து விடுவதோ அன்றிக் கெடுத்து விடுவதோ, எதையும் ஆலோசித்து எல்லாரையும் கேட்டுச் செய்தல் உத்தமம்.

5. நாம் மிகுந்த அன்பன் என்று நினைத்து நம் இரகசியங்களை யெல்லாம் சொல்லி, மனதைத் திறந்து காண்பித்த ஒருவர், சில நய வஞ்சகர்களது வார்த்தையில் மயங்கி நம்மேல் கெட்ட அபிப்பிராயம் கொண்டு நம்மிடமிருந்து சிறிது சிறிதாக விலகிக்கொள்கிறார். அந்த நயவஞ்சகர்கள் நம்மிடமும் வந்து நமது அன்பரைக் குறித்து இகழ்ச்சிகூறி நமது மனத்தையும் கெடுத்து விடுகிறார்கள். இது நட்பில் ஒரு சோதனை. இதில் நாம் தேறவேண்டும் 'கூடிப்பிரியேல்.'

6. பொறாமையின் கொடிய வலைக்குட்பட்டவர்கள் தமது மனத்தை ஒரு நிலையில் நிறுத்தக் கஜகர்ணம் போட்டாலும் முடி யாது. பிறர்களது சுகத்தைக்கண்டு வயிறெரிவது மல்லாமல் அன்

னவர்கட்குத் தீங்குசெய்யவும் முற்படுகின்றனர். இவர்கள் தமது பொருளையும் அநுபவியாது, பிறருக்கும் கொடாது, மனத்தில் பொறாமைத்தீயெரிய சிறிதேனும் சந்தோஷத்தையடையாது. இவ் வுலகிலேயே நரகத்தை யநுபவிப்பர்.

'அழுக்கா றெனுமொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.'

7. ஒரு நாள் ஒரு முனிவர் ஒரு இடத்தில் பிரசங்கஞ் செய்யும் போது எல்லாம் 'பிரம்மம்' என்றுகூறி நிரூபணம் செய்தார். அதைக்கேட்டுக்கொண்டு ஒருவன் எல்லாம் பிரமம். எல்லாம் பிரமம் என்று கூறிக்கொண்டேபோக ஆரம்பித்தான். மறுநாள் அதே மஹான் 'எல்லாம் மித்தை' என்று பிரசங்கவாயிலாய் நிருபித்தார். அதைக்கேட்ட மற்றொருவன் 'எல்லாம் மித்தை', உலகம் மித்தை நீயும் மித்தை, நானும் மித்தை' என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டுவிட்டான். மேற்சொன்ன இருவரும் ஒரு பட்டணத்திற்புகும் போது ஒருயானை மதம்பிடித்து ஆனைப்பாகனையும் தூக்கிக்கொண்டு ஓடிவந்தது. அதற்கு முன்னால் முதல்வன் செல்லுங்கால் யானைப் பாகன் அவனை விலகச் சொன்னான், அதற்கு 'நீயும் பிர்மம். நானும் பிர்மம். யானையும் பிர்மம். பிர்மம் பிர்மத்தை என்ன செய்யும்?' என்று பதிலிறுத்தான். அந்தயானை அவனைத்தூக்கிப் பூமியிலறைந்து சென்றது. மற்றொருவன் எதிர்ப்படும்போது பாகன் அன்னவனையும் விலகச் சொன்னான், அதற்கு அவன் 'நீயும் பொய். நானும் பொய். யானையும் பொய் என்று நடந்தான், யானை இவனையும் முன்னவனைப்போல் அறைந்து சென்றது. பின்னர் இருவரும் அரையுயிருடன் எழுந்து தட்டுத்தள்ளாடி முனிவரையணுகி யவரது உபதேசத்தால் கிடைத்த பலனைக்கூறியழுதனர். அதற்கு முனிவர் ஐயந்திரிபறக்கற்ற மஹாயோகிகளும் சரிவர ஞானத்தை யடையாது வருந்துகையில் எங்கோ ஒரு நாள் பலரிடையே சொன்னதை நினைத்துக்கொண்டால் ஞானம் வந்துவிடுமா? நான் சொன்னதை நீங்கள் சரிவர அநுஷ்டிக்காததினாலேயே இந்தத்துன்பம் வந்தது என்று கூறி முதல்வனைக் கூப்பிட்டு, நீ எல்லாம் பிர்மம் என்றுசொன்னதின் படி நடக்க ஆரம்பித்தாய் ப்ரஹ்மம் பிரஹ்மத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமோ? பிர்மமாகிய யானைப்பாகன் சொன்னதை நீயாகிய பிர்மம் கேளாததினால் இத்துன்பம் வந்தது என்றுகூறி யனுப்பி விட்டார். இரண்டாமவனைக்கூப்பிட்டு நீ எல்லாம் பொய்யென்பதை

கொண்டாய் யானையும் பொய். யானைப்பாகனும் பொய் நீயும்பொய். யானைப்பாகன் சொல்லும் பொய்யானால் யானையுன்னை யறைந்ததுமட்டும் எப்படி நிஜமாகும். நீ தன்புறுவது எப்படி மெய்யாகும், என்று கூறியனுப்பிவிட்டார்.

கி. வா. ஜெகந்நாதன்,

ஸ்ரீ சந்திரவிலாசம் மோகனூர்.

## விபூதி.

(229-ம் பக்கத் தொடர்ச்சி)

விபூதிதாரண வகை:—

விபூதிதார்ணமாவது, உத்தூளன தாரணமெனவும், திரிபுண்டரதாரணமெனவும், இருவகையாம். அவற்றுள் உத்தூளன காரணமென்பது பரவப் பூசுதல், பிராமணர், வெண்மையாகிய விபூதியினால் சர்வாங்கங்களிலும்; அரசர், முகம் நீங்கிய யேனைய விடங்களிலும், வைசியர் நெற்றி, மார்பு என்னுமிடங்களிலும், சூத்திரர்நெற்றி என்னுமிடத்திலும், இந்த நால்வரல்லாதவருள் அநுலோமர், வைசியரைப் போலவும், பிரதிலோமர் சூத்திரரைப்போலவும், சந்நியாசி ஏனைய விடங்களிலும் ஒவ்வோர் காலத்தும் நான்கு அல்லது ஐந்து, எட்டு, பதின்மூன்று தரமாவது "அக்கினிரிதிபஸ்ம' என்னும் அதர்வசிரோபநிடதத்தில் சாற்றப்பட்ட ஏழுமந்திரங்களாலுமுச்சரித்து உத்தூளன தாரணஞ்செய்தல் வேண்டுமாமென்று கூறப்பட்டிருக்கின்றது. திரிபுண்டரமாவது, திரி—மூன்று, புண்டரம் குறி அதாவது முக்குறி என்றும் சூலமுத்திரை யென்றும் பகரப்படும். இதற்கு அதிதேவதை, " உருத்திரன், மகேசன், சதாசிவன் " பிரமோத்திர காண்டங்கிளர்ந்தோதப்படுகின்றது. திரியுண்டரம் (32-16-8-5) என்னும் ஸ்தானங்களிலே தரிக்கத் தக்கனவாம். இங்ஙனம் (32) தானங்களைக் கூறிற்பெருகும். (16) இடமாவது: சிரசு, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழங்கால்கள், புயங்கள், முழங்கைகள், மணிக்கட்டுகள், விலாப்புறங்கள், முதுகு, கழுத்து என்னுமிடங்களாம். (8) இடமாவது: சிரசு, நெற்றி, மார்பு, கொப்பூழ், தோள்கள், விலாப்புறங்கள் என்னுமிடங்களாம். (5) இடமாவது: " நெற்றி, மார்பு, கொப்பூழ், தோள்கள்'' என்னுமிடங்களாம். இங்ஙனங்கூறிய வந்தந்த ஸ்தானங்களிலே தரிக்கப்படும் விபூதியினால் அந்தந்த ஸ்தானங்களுக்குரிய கருவிகளாற் செய்யப்படும் பாவங்கள் நீங்குமென்று பிருகச்

சாபாலோபநிடதம் கூறுகின்றது. முன்னர் கூறிய விடங்களில் நெற்றி, மார்பு, தோள்கள் என்னும் நான்கிடங்களில் ஆறங்குல நீளமும், மற்றயேனைய விடங்களில் ஒவ்வோரங்குல நீளமும் தரிக்க. அவை, ஒன்றையொன்று தீண்டினும், மிகவகலினும், வளையினும் இடையறினும் குற்றமாம். விதிக்கப்பட்ட வளவுக்குக் குணமாயின் ஆயுள்குன்றும், கூடுமாயின் தவங்கெடும் திரிபுண்டர தாரணத்துக்கு இடைவெளி ஒவ்வோரங்குல வளவினதாயிருத்தல் வேண்டுமென்பது வீணசிகோத்தராகமத்தின் கொள்கையாம். திரிபுண்டர தாரணஞ் செய்யும்போது, "தர்ச்சனி, மத்திமை, அநாமிகை" என்னும் மூன்று விரல்களாலும்இடபாகத்திருந்தும்வலபாகம்வரையிழுத்தல்வேண்டும் இதுவல்லாமலும், "நடுவிரல், ஆழிவிரல்''களினல் இடபக்கம் தொடுத்து வலப்பக்கம் வரையிலிழுத்துப் பெருவிரலினல் வலபக்கந் தொடுத்து இடபக்கம்வரையி லிழுத்துத் திரிபுண்டரஞ் சாத்துதலினல் மகாபாதகங்கள் நீங்குமாமென்று உலோகாக்ஷிஸ்மிருதி வலியுறுத்துகின்றது. இத்தாரணம் அநுலோமப் பிரதிலோமம் என்றுங் கூறுவர். வாகீசுவர வாகீசுவரிகளிடத்துத் தோன்றிய, சிவசமஸ்காரம் என்னும் தீக்ஷையைப் பெற்றவர்கள் மூன்று காலங்களிலும் சலம் கூட்டித் திரிபுண்டரந்தரித்தல் வேண்டுமென்றும், மற்றைக் காலங்களிற் சலங்கூட்டாமலே விபூதியை உத்தூளனஞ் செய்தல் வேண்டுமென்றும், மற்றைக் காலங்களிலே நீர்கூட்டித் தரிக்கின் அந்நீர் பனிநீரை (மதுவை) யொக்கு மென்றும் மதங்காகமஞ் செப்புகின்றது. சிவதீக்ஷையில்லாத ஆடவர்களும், பெண்களும், இவர்களல்லாத பிரமசாரியும், வானப்பிரகத்தனும், அவன் மனைவியும், கன்னிகையும் காலைமுதல் மத்தியானம் வரையில் விபூதியில் நீர்கூட்டித் திரிபுண்டரந் தரிக்கவேண்டுமாமென்றும், மத்தியானத்துக்குப்பின் விபூதியில் நீர் கூட்டாமல் உத்தூளன தாரணம் மாத்திரஞ் செய்யக் கடவாமென்றும் சாஸ்திரங்கள் வலியுறுத்துகின்றன: (இதற்குச்சாமியம்)

சைவசமய நெறி.

"நீருடனே சந்திதோறு நீறணிக தீக்கையுளார்
நீரறவே பூசுகவெண் ணீறு
மாதரு மதக்கி தருமத்தி யானைத் தரத்தில்
வேதியர் தம்முள் விரத்தரும்.''

விருத்தாசல புராணம்.

"மங்கையர் சந்நியாசி மறைவானப் பிரத்தன்றேவி
தங்கிய பிரமசாரி சலத்தினிற் குழைக்க லாகா

வங்குப தேசமில்லா னந்தநீர் குழைக்க லாகா
தங்கவெண் ணீற்றையள்ளித் தகிலினல் வடித்துக்கொள்வான்''

விபூதி வாங்கு முறைமை:—

ஆசாரியராயினும், சாதகராயினும், சிவனடியாராயினும் தம் முள்ளுயர்ந்தவராயினும் விபூதிகொடுப்பின் அவர்களை மூன்று அல்லது ஐந்துதரமாயினும் வணங்கி எழுந்து கை கூப்பி இரண்டு கைகளையும்நீட்டி வாங்கித் தரித்துக்கொண்டு முன்போல் மீண்டும் வணங்கல் விதியாம். இவையல்லாமல் குதிரை, சிவிகை, ஆசனம், திண்ணை இவற்றினிலிருந்து வாங்குதலும், விபூதிதருவோர் கீழ்நிற்க, தான்மேலிருந்து வாங்குவது குற்றமாம். சிவபெருமான், சிவாக்கினி எதிரிலும் முற்கூறியவர் முன்னிலையிலும் முகத்தை மாறி விபூதியையும், சிவதீக்ஷையில்லாதவர் தந்தவிபூதியையும் தரிக்கலாகாதென்று சிவாகமங்கள் கூறுகின்றன. விபூதிதரிக்கும்போது வாயங்காந்து கொண்டும், தலைநடுங்கிக்கொண்டும், கவிழ்ந்துக்கொண்டும் தரிக்கலாகாது. ஒரு விரலாலேனும், ஒருகையாலேனும் தரிக்கலாகாது. வடக்கு நோக்கியாயினும், கிழக்கு நோக்கியாயினும், இருந்து மௌனம் பொருந்திச் சிவபெருமானையும் ஆசாரியரையும்சிந்தித்து அண்ணாந்து மூன்று விரலினலே விபூதி தரித்தல் வேணுமென்று சாஸ்திரமெழுந்தோதப்படுகிறது.

அவசியம் விபூதியணியுங் காலம்:—

சந்தியாகாலங்களிலும், ஸ்நானஞ் செய்தவுடனும் மலசல மோசனஞ்செய்து சௌசம்பண்ணி, ஆசமனஞ்செய்த பின்னும், சிவபூசை, போசனம், பிக்ஷை, நித்திரை, என்னுமிவற்றிற்கு முன்னும் பின்னும், சிவதீக்ஷையில்லாதவர் தீண்டியபோதும் பூனை, எலி. நாய் கொக்கு, காகம் முதலியன தீண்டியபோதும் பிதுர் கிரிகையிலும், செபகாலங்களிலும் ஓமாக்கினி செய்யுங்காலங்களிலும் அவசியம் விபூதி தரிக்க தரியாமற் செய்யுங் கருமம் நிட்பலமாகும். திருநீறு இல்லாதமுகம் சுடுகாட்டுக்கொக்குமாம். ஆதலால், "பஸ்மமில்லாத நெற்றியைச்சுடு. சிவாலயமில்லாத கிராமத்தைக் கொளுத்து'' என்று மிருகஜ்ஜாபாலோபநிடதத்திலும் திக்பஸ்ம ரஹிதம் பாலம் திக்க்ராம மசிவாலயம்'' என்று இடித்துரைத்திருக்கின்றமையால் வேதத்திலும், "விபூதியில்லாத நெற்றி பாழ்; சிவாலயமில்லாத கிராமம் பாழ்; சிவபெருமானைப் பூசியாத பிறவிபாழ்; சிவத்தையுற்றுக்கூறாத சாஸ்திரம் பாழ்; என்று கூறிய கருத்தையுட்கொண்டன்றோ நமது அப்பரும்,

" திருக்கோயி லில்லாத திருவி லூருந்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லா மூரல்ல வடவி காடே"

என்று அருளிச்செய்தார். பிறவி நோய் தீர்ப்பதற்கு மணிமந்திர ஔஷதங்களுள்ளே விபூதியானது ஔஷதம் எனப்படும் என்று சங்கரசங்கிதை கூறுகின்றது. எவரொருவர் சரீர மெங்கும் விபூதி தரிப்பாரையின் அவன் சரீரத்து எவ்வளவு ரோமகூபங்களுண்டோ அவ்வளவும் லிங்கங்களாம் என்று ஜாபாலங்கூறுகின்றது. ஆகலால், அவசிய மெக்காலத்திலும் விபூதி யணியக்கடவர். அணியாதவர்களைக் காணில் அஞ்சி யகல்கவென்று போதவூர் மணிவாசகரும்

" பிணியெலாம் வரினு மஞ்சேன் பிறப்பினே டிறப்பு மஞ்சேன்
றுணிநிலா வணியி னுன்றன் றொழும்ப ரோடழுந் தியம்மா
திணிநிலம் பிளந்துங் காணுச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே''

என்று விதந்தோதுவதனு லறிக. (தொடரும்.)

தி. பட்டுசாமி ஓதுவார், திருவண்ணுமலை

## மாந்தரைக் கெடுப்பது மதுவே.

(221-ம் பக்கத் தொடர்ச்சி.)

அருந்தும்போதே இத்தகைய கசப்பைத் தரத்தக்க மதுவை ஏன்தான் அருந்துகிறார்களோ! நல்லோரையும் பொல்லோராக்கி, பணக்காரனையும் ஏழையாக்கி, கல்விமானையும் மூடனாக்கி, சுகதேகியையும் நோயாளியாக்கி, திடசரீரத்தையும் என்புகூடாக்கி, மோக்ஷபோகத்தையும் நரகவேதனையாக்கும். இந்த மதுவை ஆறறிவுடைய மனிதர் விரும்புவது மிக்க தகாத செய்கையாகும்.

கனவான்களே! சாராயம், கள், பிராந்தி, விஸ்கி, திராட்சைரசம் முதலிய எல்லா வகை மதுபானங்களிலும் ஆல்கஹால் (Alcohol) என்னும் ஒருவித விஷம் கலக்கப்பட்டிருக்கிற தென்பதை நாமனைவ

ரும் அறிவோமன்றோ ? அறிந்திருந்தும் விஷத்தை யருந்த சம்மதிக் கிறீர்களே ! நம்முடைய வாழ்நாள் மேன்மையுறுமா ? நமது நாடு செழித்துப் பழைய நிலைமையையடையுமா? நமது நாடு க்ஷீணமெய்தி யதற்கு உதவியான காரணங்க ளனேகத்தினுள் மதுபானமு மொன் றென அறியீர்களா ! நாமறிந்த மாத்திரம் மதுவருந்தி யாதாமொரு நன்மையை யடைந்தவர்கள் யாரேனும் உண்டா? நீங்கள் கண்டு அல் லது கேட்டிருக்கிறீர்களோ ? மதுவருந்தி கெட்டார்களேயல்லாமல் நன்மையடைந்தவர்கள் யாருமிலர்.

"மது வருந்துவதினால் மூளை விசாலித்து புத்தி தீக்ஷண்யப்படு வதோடு, திரேகத்தில் நோய்களணுகுவதில்லை" என அனேகர் நினைப் பதுண்டு. இது அறியாமையே. மதுவருந்தியவுடன் உள்ள அறி வையுமிழந்து குருடர்களேப்போல் தடுமாறும் பேதைகளுக்கு அறிவு விசாலிப்பதெங்ஙனம்! மேற்கண்டவாறு நினைக்கும் நேயர்கள் இவர் களைக்கண்டேனும் இந்த அற்ப எண்ணத்தை ஒட்டிவிடவேண்டுதும்.

மதுவருந்தும் பழக்கமுடையவர்களுக்கு சிறிதும் பலமேகிடை யாது. அவர்கள் தேகம் நன்றாய் வளர்வதில்லை. அவர்கள் வெளிக்கு எவ்வளவு யோக்கியர்களாக பேசிவிட்டாலும் உண்மையில் சுத்தக் கோழைகளே. இதுநன்மை, இதுதீமையென்னும் பகுத்தறிவு அவர் களிடம் கிடையா. ஒரு அற்ப காரியத்திற்கும் சீக்கிரம் கோபம் வந்துவிடும்.

யௌவன வாலிபர்களிருவரில் ஒருவன் மதுவருந்துபவனும், மற்றவன் அவ்வழக்கமில்லாதவனுமாயிருப்பார்களாயின், மதுவருந்து பவனுடைய அறிவு, வளர்ச்சி, திடம் முதலியவைகள் மற்றவனைக் காட்டிலும் பெரும்பாலும் குன்றியிருக்கக் காணலாம். ஐந்து வய துள்ள ஒரு குழந்தையை மதுவருந்தப் பழக்கிவிட்டால் அந்தப் பாலகன் நாளடைவில் தேகம் உலர்ந்துபோய், மெலிவடைந்து நன் றாய் வளரவே மாட்டாது. இது உண்மை

மது வளர்ச்சியால் நமது இந்திய தேசம் வெகுவாய்க் கெட்டு விடுகிற தென்பதைக்குறித்து கடந்த ஆனிமாதச் சஞ்சிகையி னிதழ் களொன்றில் நண்பர் ம-ா-ா-ஸ்ரீ, சா. ரு. சொக்கலிங்கம் பிள்ளை யவர்கள் போதிய உதாரணங்களுடன் மதுவிலக்கு என்னும்வியாசத் தில் விரிவா யெழுதியுள்ளார்கள். நாம் மீண்டு மவற்றை இவண் வரைவது அனவசியம்.

ஆனதால் நேயர்கள் "அவன் பணம் பறிக்க எவ்விதமாவது வெள்ளை எட்டை கருப்பாக்கிவைக்க வேண்டுமே" என்னும் தனுக்

கான எண்ணங்கொண்டு, மேற்போக்காய் வாசித்துவிட்டு சுவற்றின் மூலையில் எறிந்துவிடாமல் சற்று ஊன்றி யோசிக்கவேண்டிக்கொள்ளுகிறேன். யோசிப்பதோடு விடாமல் தங்களிடம் இந்த கெட்ட வழக்கமிருப்பின் நாம் மேற்கூறிய உண்மைகள் சரிதானுவென ஆராய்ந்து, அவற்றை அற ஒழித்து விடவேண்டுகின்றனம் பிறகும் அவற்றை தலை எடுக்க விட்டீர்களோ பின்னர் நாம் அறிவாளிகள்தாம். ஒருவர் கூறும் அல்லது வரையும் புத்திமதிகள் தம்முள் எத்தகைய பொருள்களை ஏற்று வெளிவந்து போதிப்பினும் அவற்றை நன்காராய்ந்து அதன்படி நடப்பதே அறிவாம்.

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." (பொய்யாமொழியார்.)

எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் பதினெண் திங்கட் குழவியாம் நமது ரஞ்சிதனுக்கு மார்க்கண்டனைப் போன்று சிரஞ்சீவி பட்டத்தையும், நமக்கு "பாரத புத்திரராகிய நாம் தமிழ்த்தாயின் சுதனுகிய 'ரஞ்சிதனை' ஆதரிக்கவேண்டிய கடமையுடையவர்களாயிருக்கிறோம்" என்னும் மதியையும் ஈந்து நம்மனைவரையும் ஆதரித்துக் காப்பாராக. சுபம்!

பி. எஸ். வரதராஜு,
பாப்பிற்றிகாமா, அவிசாவிளை, இலங்கை.

## சங்குபாலகன்.

### 6-ம் அத்தியாயம்

### திருமணம்.

நம் சங்குபாலகன் உமயாபுரி பட்டணத்திற்கருகில் நடந்து கொண்டிருந்த பொழுது அவனுக்கு முன்னுல் ஒரு சிறு ஓடைகுறுக்கிட்டது. அப்பொழுது அவ்வோடையில் அவ்வுமயாபுரியரசனின் புதல்வி நீராடிக்கொண்டிருந்தாள். இவன் அவ்வோடையைக்கடந்து செல்லவேண்டித் தான் மேல் போர்த்திருந்த ஒணன் தோலைச் சுருட்டி உயர்த்திக்கொண்டு தாண்டியபொழுது அவள் இவனுடைய கணைக்காலின் அழகைக்கண்டு மகிழ்ந்து 'இவர் கணைக்காலே இவ்வளவழகாயிருக்கின்றதெனின், இன்னும் இவருடைய மேனியின் அழகு எவ்விதமிருக்குமோ? எவ்விதத்திலும் இவரை யான் மணமுடித்துக் கொள்ளவேண்டும். ஒருத்தி ஒருவர்மேல் காதல் கொண்டால்

அவள் அவரையே கணவனுகக் கொள்ளவேண்டும். அவ்விதஞ் செய்யாவிடின் அவள் கற்பு அழிந்துவிட்டது போலவேயாகும். ஏனெனில் அவள் கொண்ட காதலே அவரை மணந்தது போலாகி விட்டது. . ஆதலால் யானும் அவ்விதமே இவரைக் கணவனுகக் கொள்கின்றேன்' என்று எண்ணிக்கொண்டு சீக்கிரம் நீராடிவிட்டுத் தன் தோழிகளுடன் அரமனையடைந்து அன்னையிடஞ்சென்று, அன்னையே! யான் இதுவரை கற்புநிலை வழாது இருந்துவந்தேன். இனிமேல் யான் ஒரு கணவரை மணந்து இல்லறத்தைக் கைக்கொள்ளப் போகிறேன். "இல்லறமல்லது நல்லறமன்று அன்ரே?" என்று உருக்கமாகக் கூறினள்.

இவளுடைய உருக்கமான மொழிகளைக் கேட்ட அவளுடைய அன்னையானவள் உடனே தன் கணவனிடம் தம் புதல்வியின் கருத்தைக் கூறினள். இதைக்கேட்ட அரசன் தான் நெடுநாளாகத் தன் புதல்விக்கு மணமுடிக்கக் கருதியிருந்தசனுலும் இப்பொழுதுசமயம் வாய்த்ததனுலும் தன்மனைவியின் உரைக்கிணங்கி அப்பொழுதே எல்லா நாட்டு மன்னர்களுக்கும் "சுயம்வர" ஓலை எழுதியனுப்பினுன். மன்னர்கள் வந்து சேர்வதற்குள் திருமணம் வந்தாலும், மன்னவர்கள் தங்குதற்குரிய விடுதிகளும் சிங்காரிக்கப்பட்டன. எங்கும் மேளவாத்தியங்கள் முழங்கின. பட்டின முழுதும் கொண்டாட்டம், மகிழ்ச்சி, ஆரவாரம் மிகுந்திருந்தது.

இவ்வித மிருக்கையில் "சுயம்வர" ஓலையைக்கண்ட மன்னர்கள் யானைமேலும், குதிரை மேலும், ஒட்டை மேலும், திரவியங்களைக் கட்டிப் போட்டுக்கொண்டு வெகு சிறப்பாய் அணியணியாக வந்திறங்கினர். இவர்களுக்கெல்லாம் வரவேற்பு அன்புடனும் மரியாதையுடனும் நடந்தது. திருமண மண்டபத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசனமிடப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆசனத்தி லமர்ந்தனர்.

இச்சமயத்தில் அரசன் மகள் தன் தோழிகளுடன் அரமனை உப்பரிக்கையிலிருந்து எல்லாரையும் நோக்கினள். அங்கு ஒனுன் தோனுநேத்த நம் சங்குபாலகனைக் காணவில்லை. அரசர்கள் வரவேண்டிய இடத்திற்கு இவ்வித உடைபணிந்தவன் செல்லலாமா? உடனே அவள் தன் தந்தையிடஞ் சென்று, "தந்தையே! எல்லாமன்னர்களும் வந்திருக்கின்றனரே, மற்ற தனவந்தர் முதல் கூனர்,

குருடர், முடவர் முதலிய ஏழைகள் மாத்திரம் ஏன்வரக்காணோம். அவர்களும் வரட்டும்'' என வேண்டிக்கொள்ள அவன் எல்லாரையும் அழைத்துவரக் கட்டளையிட்டான். அவ்விதமே சில பணியாட்கள் சென்று சங்குபாலகன் முதல் யாவர்களையும் மணப்பந்தலுக்கு அழைத்து வந்தனர்.

எத்தனையோ மன்னர்களும் தனவந்தர்களும், ஏழைகளும் குழுமியிருந்த மண்டபத்தில் நம் சங்குபாலகன் மாத்திரம் ஒரு தொங்கலில் உட்கார்ந்திருந்தான், எல்லாரும் "என்மீதில் மாலை விழவேண்டும். என்மீதில் மாலை விழவேண்டும்'' என எண்ணிக் கொண்டிருந்ததுபோல, இவன் எண்ணிக்கொண் டிருக்கவில்லை. இவ்விதமிருக்க உமையாபுரி மன்னன் மகள் அங்கிருந்தவர்களை யெல்லாம் ஒவ்வொருவராகப் பார்த்துக்கொண்டே வந்தாள். பிறகு தன் கரத்திலிருந்த பூமாலையைச் சுற்றி வீசினாள். (தொடரும்).

அ. ச. அருணாசலேசுவரர், ருவான்வெல்ல, இலங்கை.

## வேலாயுதக்கண்ணி.

தந்தைதாய் தெய்வஞ் சற்குருநீ யெனவே
சிந்தை செய்வார்க் கின்பஞ்செய்யும் வேலாயுதனே
எள்ளினுள் ளெண்ணெயென் றெங்கு நிறைந்தவனே
உள்ளந்தனி லுணர்வா ருயர்ந்தோர் வேலாயுதனே
மாணிக்கத்துள் ளொளிபோன் மருவியே நின்றவனே
காணத் தகுமதென்ன கதிர்வடி வேலாயுதனே
கற்பகமே தேனே கரும்பே கனியமுதே
யற்புதமே யன்பே யரசு வேலாயுதனே
வாயார வாழ்த்தி வணங்கியுனைப் போற்றார்
காயமெடுத் தென்னபலன் கண்பார் வேலாயுதனே
திருப்பரங் குன்றில்வந்து தெய்வானை நாயகியை
விருப்ப மணஞ்செய்து விளங்கும் வேலாயுதனே
செந்தூரிருந்து சிவபூசனைஞ்செய்து
எந்தூரும்போற்ற எழுந்த வேலாயுதனே
திருவாவினன் குடியில் தேவர்முனிவர் தொழக்
குருவாகினின்ற குழந்தை வேலாயுதனே
அருணகிரி நாதர்க் கன்புடனே நீயுரைத்த
பொருள்தனை யென்றனக்குப் புகல்வாய் வேலாயுதனே
அவ்வை மொழிகேட்டு ஆசைகொண்டு கானகத்தில்
எவ்வமாயீந்து கனியீந்த வேலாயுதனே
பொய்யாமொழியுடன் போய்புலவனென்பேர் முட்டையென்ற
வையா குமரா வருள்வடி வேலாயுதனே

கும்பமுனிக்கின்ப முலகுருவா யெழுந்தருளி
நம்பிடவே மெய்யுரைத்த நாதா வேலாயுதனே
குன்று தோறுடலிமேல குறமாதுடன் கூடி
சென்று விளையாடுந் தேசிக வேலாயுதனே
சோலைமலையிற் பரஞ்சோதி வடிவாகினின்று
ஞாலந்தனைக் காத்த நாத வேலாயுதனே
கண்மணியே ஞானக்கருணைத் திருவுருவாய்
விண்மணியே யென்றன் விருப்பே வேலாயுதனே
பூவின்மணம்போற் பொற்பதியே நின்றவுனை
நாவிற்புகழவரம் நல்கும் வேலாயுதனே
எவ்வுயிர்க்கு மெவ்வுயிராயிருந்து பதினாலுலகு
மவ்வுயிர்க்குந் தாயாயமர்ந்த வேலாயுதனே
ஆரணமுன் மகிமை யறிந்துசொல்லுந் தரமோ
பாராளும் செல்வப் பழனி வேலாயுதனே
சைவம் விளக்குஞ் சம்பந்த னாகவந்து
தெய்வ மெனப்புவியிற் சிறந்த வேலாயுதனே
வள்ளிக் கொடிபடர வாய்த்தகொழுக் கொம்பாகித்
தெள்ளு மனத்தினின்ற தேசிக வேலாயுதனே
நக்கீர தேவர் நவின்ற கவிக்கிரங்கி
மிக்கவர மீந்தருளும் விமல வேலாயுதனே
மெய்யில்லாப் பொய்யுடலை மெய்யென நம்பியிந்த
வையகந் தனிலுனையான் மறவேன் வேலாயுதனே
வஞ்சக லோபரையும் வணங்கிப் புகழாமல்
நெஞ்சி லுனைப்புகழ்ந்து நிற்பேன் வேலாயுதனே
ஆனந்தகண்ணீ ரருவிபோலே யொழுக
ஞானத்தார் காண்பருன்னை நல்லோர் வேலாயுதனே
உன்னடியார்க்கூட வொருமித்திருந் துனது
பொன்னடி காண்பதென் னாட்புனித வேலாயுதனே

(தொடரும்)

பழ ச. கருப்பஞ் செட்டியார், கீழச்சிவல்பட்டி.

## தர்மம்.

"ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித் தாதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."—ஔவை.

கடல்புடை சூழ்ந்த இந்நிலவுலகின்கண் விளங்கும் சதுர்வித புருஷார்த்தங்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்பவையேயாம்,

மேற்கூறிய நான்கினுள் இறுதியில் கூறிய இன்பம் என்பது இஹ லோக சுகத்தைமாத்திரம் கொடுக்கக்கூடியது. பொருள் என்பது இஹ பரசுகங்கள் இரண்டிற்கும் சாதனமாகும். அறமோ இஹம் பரம் வீடு இம்மூன்றையும் கொடுக்கக்கூடியது. அறம் செய்தால் இன்பமும் பொருளும் குறைவின்றிக்கிடைப்பதோடுங்கூட மோக்ஷ வீட்டையும் அளிக்கும் என்பதில் ஆக்ஷேபணையுமுண்டோ!

இதுபற்றியே நம்மூதாட்டியாரும் ஆத்திச்சூடியில் 'அறம் செய விரும்பு' என்றுங் கூறியுள்ளார். அறம் என்பது யாது எனில்:—ஈதல்—அறம் கொடுத்தலே தருமமாகும். கொடுத்தல் என்றால் தன்னிடம் வந்து யாசிக்கும் எளியோர்க்கு பணமோ இன்னும் வேறு ஏதுவோ தானமாக ஈவது. அதுவும் கேட்டோர் எல்லாருக்கும் கொடுத்து விடலாமா என்றால், 'பாத்திரமறிந்து பிக்ஷயிடு' என்ற நீதிவாக்கியப்படி கூன், குருடு, ஊமை, நொண்டி, சப்பாணி, கிழ வயதுடையோர், வேலைசெய்யச் சக்தியற்றோர், முதலான எளியவர்களுக்கும், கோவில்கட்டுவது, குளம்வெட்டுவது, சத்திரம் சாவடிகள் கட்டுவது, முதலான தர்மகாரியங்களுக்குக் கொடுப்பதே தர்மமாகும். அதல்லாமல் மாரியாத்தாள் தர்மமென்றும் இன்னும் சில தர்மங்களுக்கென்றும் பொய் புளுகுகளெல்லாம் சொல்லி யாசித்து கள் குடித்தல் முதலான கெட்ட காரியங்களையே தொழிலாகவுடைய தீயர்க்குதவுதல் மகாபாபமாகும்.

அறம் செய்தலால் வரும் இன்பத்திற்கும் அதை மறத்தலினால் வரும் துன்பத்திற்கும் ஓர் அளவில்லை. இதனையறியாத பேதைகள் தமதுயிர் வாழ்க்கையை 'நீர்க்குண் மொக்குளும் கார்க்குண் மின்னலும்' என்றறியாது யாம் இளமைதானே முதுமையிலல்லவோ அறம் புரிய வேண்டுமென்று நினைத்து நிற்கின்றனர். இம்மானிட சரீரமோவெனின்,

"நீரிற்குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரின்
எழுத்தாகும் யாக்கை நமரங்களென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்னு"

இவ்வான்ம சரீரத்தை நம்பி மோசம் போகின்றனர். அந்தோ! கஷ்டம்!! கஷ்டம்!!! இங்கின்றவுடலை நம்பி மோசம் போகாதேயுங்கள் இளமை முதல் உயிர் இவ்வுடலைவிட்டு நீங்கும் வரை அறம் செய்தல் என்னும் தவத்தையே செய்து வந்தால் அந்தியத்தில் மோக்ஷவீடு கிட்டும் என்பதிலும் சந்தேகமா?

"அர்த்தாகிரகே நிவர்த்தந்தேஸ்மசானே மித்ர பாந்தவாஹ!
ஸுக்ருதம் துஷ்கிருதஞ் சைவகச்சந்து மநுகச்சதி.

தாத்:—தர்மத்தை செய்யாமல் ஒளித்துவைத்த தனம் லோகாந்தரம் போகும்பொழுது கிரகத்திலேயே நின்றுவிடுமன்றி கூடவராது. புத்ரமித்ர பந்துக்கள் ஸ்மசானம் வரையில் வருவார்கள். ஆனால் புண்யபாபங்கள்—தான்செய்ததான தர்மம் முதலானவைகளாலும் நற்காரியங்களாலும் ஏற்பட்ட புண்ணியபாபங்கள் மட்டுமே கூட வரும். ஆதலால் அர்த்தாபேக்ஷயினால் அநேக கெட்ட காரியங்களெல்லாம்செய்து சம்பாதித்து நாசிக்கும்வேசிக்கும்கொடுத்து வீண் செலவுசெய்து கடைசியில் மானபங்கப்படுத்தும் இப்பணம் கூட வரப்போகிறதில்லை நாம் இப்பணத்தை:

"பிறக்கும்போது கொடுவந்ததில்லை பிறந்து மண்மே
லிறக்கும்போது கொடுபோவதில்லை இடைநடுவிற்
குறிக்கு மிச்செல்வம் சிவன்றந்ததென்று களித்து
அறஞ்செய்யும்படி எனக்குப் புகட்டுவாய் கச்சி ஏகம்பனே"

என்று மூதறிஞரும் கூறியிருக்கின்றனர். மற்றும் சிலர் தான் சம்பாதிக்கும் பொருளை தனக்கும் செலவழித்து மோக்ஷசாதனத்திற்கு வழிதேடாமலும் தன் சுற்றத்தார் தாய் தந்தையர்க்கு முதவாமலும் வீணே மண்ணில் புதைத்து மாண்டு போகின்றனர். அதை யுன்னியே நம் பாட்டியாரும்:

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்து
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யநுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்"

என்று கூறியிருக்கின்றனர். அப்படிபாவிகள் பணம் யாருக்குதவுகின்றது? ஒருவர்க்குமில்லை.

தானங்களி லெல்லாஞ் சிறந்தது அன்னதானம். அவ்வன்னதானத்தின் பெருமை சொல்லுதற்கிபலாது.

"எண்ணிலாத் தவங்கள் யாகங்கள் செயினு
    மீஸ்வர விஷ்ணுவா லயங்கள்
பண்ணுலாங் கவிதை பாடினு மனேகம்
    பாரினில் வருபல னேது
கண்ணுலாவிய நற்சுருதி மெய்பொருளைக்
    கண்டர னடியாருக்
குண்ண லாமென வமுதளித்தவ னடை
    பலனுரைக்கவு முடியாதே.

(தொடரும்)

சங்கரப்ப ஸ்ரீனிவாஸ், ஒடையலூர்.

# இரக்தாக்ஷி வருஷத்திய இரஞ்சித போதினியின்
## திருக்கணித சர்வ முகூர்த்தப் பஞ்சாங்கம்.

கலியுகாதி 5026 —சாலிவாகனம் 1847 --பசலி 1333---ஹிஜரி 1342
கொல்லமாண்டு 1099-1100, இங்கிலீஷ் **1924**ஹு

| ஆவணி௴ | ஆகஸ்டு௴ செப்டம்ப | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | அமிர்தாதி யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 16 | சனி | துதி41-35 | சத 20-3 | அ 20-3 ம | விஷ்ணுபதி புண்ய |
| 2 | 17 | ஞா | திரி 39-45 | பூா 19-25 | சி19-25அ | கரிநாள் |
| 3 | 18 | திங் | சது 39-38 | உத் 20-30 | சித் 60 | சங்கடசதுர்த்தி |
| 4 | 19 | செவ் | பஞ் 41-15 | ரே 23-15 | சித் 60 | பிரயாணம்விலக்க |
| 5 | 20 | புத | சஷ் 44-25 | அசு27-35 | ம 27-35சி | |
| 6 | 21 | வியா | சப் 49-0 | பர 33-23 | சி33-23 ம | சீதளாசப்தமி |
| 7 | 22 | வெ | அ 54-30 | கி 40-13 | சி 40-13 ம | கோகுலாஷ்டமி |
| 8 | 23 | சனி | நவ 60-0 | ரோ47-30 | அ47-30சி | ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி |
| 9 | 24 | ஞா | நவ 0-30 | மிரு 54-45 | சித் 60 | கரிநாள் [க்க |
| 10 | 25 | திங் | தச 6-15 | திரு 60-0 | சித் 60 | வியாதியஸ்தர் குளி |
| 11 | 26 | செவ் | ஏ 11-30 | திரு 1-33 | ம 1-33 சி | அஜா ஏகாதசி |
| 12 | 27 | புத | து 15-40 | புன 7-20 | சித் 60 | பிரதோஷம் |
| 13 | 28 | வியா | திர 18-33 | பூச 11-58 | அ11-58சி | மாசசிவராத்திரி |
| 14 | 29 | வெ | சது 20-8 | ஆயி15-13 | மர 60 | சர்வ அமாவாசை |
| 15 | 30 | சனி | ● 20-15 | மக 17-5 | அ17-5 சி | மௌனவிரதம் |
| 16 | 31 | ஞா | பிர 18-53 | பூர 17-35 | சி17-35 அ | சந்திர தரிசனம் |
| 17 | 1 | திங் | துதி 18-25 | உத் 17-0 | சித் 60 | சோடசோமவிரதம் |
| 18 | 2 | செவ் | திரி 13-3 | அஸ்15-25 | சித் 60 | விநாயக சதுர்த்தி |
| 19 | 3 | புத | சது 8-50 | சித் 14-10 | சித் 60 | ரிஷிபஞ்சமி |
| 20 | 4 | வியா | பஞ் 4-5 | சுவா 10-5 | அ 10-5 சி | சூரியசஷ்டி |
| | | | சஷ் 58-50 | விசா 6-40 | | |
| 21 | 5 | வெ | சப் 53 25 | அனு 3-5 | சித் 60 | ஜெயசப்தமி |
| 22 | 6 | சனி | அ 47-48 | கே 59-25 | சித் 60 | அவமாகம் |
| 23 | 7 | ஞா | நவ 42-10 | மூல 55-40 | அ55-40சி | நந்தநவமி |
| 24 | 8 | திங் | தச 36-40 | பூரா52-10 | மர 60 | கெஜலக்ஷ்மி விரதம் |
| 25 | 9 | செவ் | ஏ 31-43 | உத் 48-55 | அ48-55சி | சர்வமத்வ ஏகாதசி |
| 26 | 10 | புத | து 26-33 | திரு 46 5 | சி46-5 பிர | பிரதோஷம் |
| 27 | 11 | வியா | திர 22-20 | அவி 44-0 | சி 44-0 ம | சர்வமுகூர்த்தம் |
| 28 | 12 | வெ | சது 18-48 | சத 42-38 | சித் 60 | பௌர்ணமி |
| 29 | 18 | சனி | ○ 16-13 | பூர 42-20 | ம42-20 சி | யசுர்வேதஉபாகர்ம |
| 30 | 14 | ஞா | பிர 14-53 | உத் 43-15 | அமி 60 | மாளயபக்ஷ ஆரம்ப |
| 31 | 15 | திங் | து 14-48 | ரே 45-28 | சித் 60 | கன்னிரவி 47-45 |